459

17 JAN 1928

ஓம்.

தத். ஸத்.

# ஸ்ரீ விலக்ஷணாநந்தஸ்வாமிஜீ

திருவாய் மலர்ந்தருளிய

# அக்ஷர நுட்பம்.

பாகியார்த்த ஆந்தரார்த்தப்
பொழிப்புரை.

௫௲௨௯. ௧. ௯. ௨௫ திங்கள். காலை

திருநெல்வேலி,
மீரானியா அச்சுக்கூடத்தில்,
பதிப்பிக்கப்பட்டது.

1928.

ஓம்.

தத். ஸத்.

விலக்ஷணனந்தர்

# அக்ஷர நுட்பம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 JAN 1928
MADRAS

பாகியார்த்த ஆந்தரார்த்தப் பொழிப்புரை.

காப்பு.

1. அக்கரநுட்ப மாமிதையறைய.
அக்கரநாத னடியிணையாழ்வாம்.

## பாகியார்த்தம்.

அகாரமுதல் னகாரவரையிலுள்ள சர்வ எழுத்துக்களை யும், மற்றும் பிரசித்தமான பாஷாக்கிரந்த எழுத்துக்களை யும் அதனதன் அதிநுட்ப அதிசாதுர்ய தாத்பர்ய விஷயங் களையும் லௌகிக வைதீக உலக சம்பந்த மார்க்கமாய் எடுத் துக்கூற ஆரம்பித்த இன்னூலாசிரியர் இவை நிர்விக்கின மாக நிறைவேறும்பொருட்டு எல்லா அக்ஷரங்களின் அந்தர் பூத அதிஷ்டான பரமேஸ்வரனது பாதாரவிந்தங்களை ஸ்தோத்தரிப்பாம்.

## ஆந்தரார்த்தம்.

அசைவின்றிய அக்ஷர சொரூப சைதன்யத்தின் அதி சூக்ஷுமை இரகசியார்த்தங்களை இன்னூல்வாயிலாக வெளி யிடுவதற்கு யதார்த்த வஸ்துவின் வடிவ அக்ஷர நாதனது பாதாரவிந்தங்களை அனவரமுமாழ்ந்திருக்கக் கடவோமாக.

## 1. அக்கர மணிவாம்.

**பாகியார்த்தம்.** எல்லாவக்ஷரங்களின் உள் இரகசிய அமைப்பைக்கண்டு அந்தந்த அக்ஷரங்களின் அதிதேவதை களைப் பக்திசெய்து அவ்விடத்தே அணைந்திருப்போமாக.

ஆந்தரார்த்தம். சலனமில்லாத வியாபக சொரூபமான பரமாத்மாவை சவிகற்ப, நிருவிகற்ப, சகச நிஷ்டை வாயிலாகச் சேர்வோமாக.

2 ஆத்தும மாவாம்.

பா. ஜென்மமில்லாத வஸ்து அறியவேண்டில் மனம், வாக்கு, சரீரம் இம் மூன்றின் கிருபை அவசியம் வேண்டுமாதலால் அவற்றையே ஆத்மாவாகக் கொண்டு அதனைப் பாலாவோமாக.

ஆ. ஜீவனது யதார்த்த லக்ஷணமான ஆன்மாவின் வடிவமே மஹா வாக்கிய லக்ஷண சிரவண, மனன, நிதித்தியாசன பரிபாக அவஸ்தையின் பிரம சொரூபமென்று தெளிவடைந்த இடத்திலாவோமாக.

220
170L

3. இச்சையை யீர்வாம்.

பா. அன்னியருடைய மனைவி, புத்திரர், மண், செல்வம் முதலியவைகளைக்கண்டு இது நமக்கு வேண்டுமென்னுங் கெட்ட ஆசையை நல்ல ஆசையால் கெடுத்துவிடுவோமாக.

R6
N18

ஆ. தசேந்திரிய மனோவிஷய பிரபஞ்ச மாயா மயக்கதுவைத ஆசையை அனுபவ அப்பியாச பலத்தால் அதைக் கெடுப்போமாக.

4. ஈசனை யிசைவாம்.

பா. பிரமா, விஷ்ணு, சிவன், முருகன், விநாயகன், மகேஸ்வரன், சதாசிவன், தக்ஷிணாமூர்த்தி முதலிய ஜெகத் ரக்ஷகவடிவ ஈஸ்வர சைதன்னியர்களையும் அன்னோர் சக்திகளையும் அன்பினிசைந்திருப்போமாக.

ஆ. மாயாப் பிரதிபிம்பரூப ஜெகத் ரக்ஷக ஈஸ்வர

183884

னது அனுக்கிரகத்தால் அந்த ஈஸ்வரனுடைய அந்தர் பூத லக்ஷியார்த்தப் பிரம வஸ்துவை இசைந்திருப்போமாக.

5. உள்ளுண ருள்வாம்.

பா. உலக விஷயங்களிலுள்ள எவ்விதக் காரியங்களாலும் முதலில் அந்தக்கரணத்தில் விசாரித்து அந்த விசாரணையின் முடிவில் அக்காரியத்தைச் செய்து முடிக்கவேண்டுமென்றறிவாயாக.

ஆ. சர்வ தத்துவங்களும் உள்ளாயிருக்கக்கூடிய ஞான சொரூபமான பிரஹ்ம வஸ்துவை அறிவதற்கு எல்லாத் தத்துவங்களையும் ரகிதஞ்செய்து அப்பாற்போய் விசாரணை செய்வோமாக.

6. ஊதிய மூழ்வாம்.

பா. லௌகிக விஷயங்களில் ஆரம்பித்த தசையினின்று மேற்செல்ல அதற்கு மேலான நிலை கைகூடிவருமென்று தெரிந்தபின் அந்த லாப லக்ஷியத்தில் மனவாசையை வைப்போமாக.

ஆ. சங்கற்ப விகறப அறிவுகளோடுகூடிய மாயா சமுத்திரத்தின் ஞானப்பியாசக்கப்பலை விடுவித்து ஆங்கப்பாலுள்ள துரியமெனுந் தீவிற்சென்று பிரமானந்த ஆகார வடிவ லாபத்தைச் சதாகாலமு மடைந்திருப்போமாக.

7. எச்சிலை யேல்வாம்.

பா. அன்னிய மாதர்கள் உமிழ்நீர், உச்சிஷ்டம், மயான நிலம், மாமிசம், மது மற்றெல்லாவித லாகிரி பதார்த்தங்கள், சண்டாளர்கள், அசுத்தமனதுடையவர்கள் இன்னோர்களது சாவகாச மென்னும் எச்சிலை அடியோடு விட்டொழிப்பாயாக.

ஆ. விஷயானந்த, மனுஷ்யானந்த, தேவானந்த, முதலிய அனித்திய ஆனந்தங்களையும் மண், பெண், பொன் முதலிய மூவாசை யென்ற எச்சில்களையும், சர்வ வாதனை வடிவ எச்சில்களையும், அடியோடு விட்டு விட்டு அகண்டானந்த சொரூபவஸ்துவை நினைப்போமாக.

## 8. ஏகம் பணிவாம்.

பா. உலகிலுள்ள எவ்வாலயங்களுக்குச் சென்றாலும் அவ்விடங்களிலுள்ள தேவர்களை ஒன்றாகப் பாவனை செய்து பணிந்துவருவாயாக.

ஆ. ஜீவமாயா ஜடப்பிரபஞ்ச ஈஸ்வர சைதன்ய மாயா விலக்ஷண துவைத ரகித அத்வைத பிரஹ்மத்தை அபேதமாக நமஸ்கரிப்போமாக.

## 9. ஐயதை யார்வாம்.

பா. வீடு, சரீரம், மனது, வஸ்திரம், நிலைமை, ஆசாரம், செய்கை இவைகளையெல்லாம் பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாயும் நேராகவு மிருந்துகொண்டிருப்போமாக.

ஆ. அனித்திய, அசுத்த, ஜடரூபமான மாயாரூப ரகித பிரஹ்ம சொரூபத்தில் அழகு பொருந்திய மலமில்லாத சூக்ஷ்ம வடிவ நமது மனத்தை நிலைக்கச் செய்து அது நாமாவோமாக.

## 10. ஒருபொருளோர்வாம்.

பா. பாஷை, மதம், தேசம், கண்டம், உலகம், புவன முதலிய எதுவானாலும் அந்தந்த விஷயங்களை ஊடுருவச் சந்தேகமின்றி யறிவோமாக.

ஆ. சொப்பன வடிவ ஜகத்தின் வேறுபாடில்லாத ஏகமான வஸ்துவைக் குருவின் அனுக்கிரக பிரமாண சந்தான பலத்தால் சைதன்யமாக அறிந்துகொள்வோமாக.

### 11. ஓதிலி யுறவாம்.

பா. மாதர், மக்கள், மித்திரர், ஊரார், மற்றுள்ளார் இன்னோர்களிடம் பிரயோஜனமில்லாத விஷய சம்பாஷணைகள் பேசாமல் மௌனமாயிருப்போமாக.

ஆ. வாக்குமாத்திரம் தடைபட்ட வாக்கு மவுனம் தசேந்திரியங்களுந் தடைபட்ட கரண மவுனம், சர்வ தத்துவங்களுந் தடைபட்ட காட்ட மவுனம் என்னும் மவுனங்களுந் தாண்டிய பேசா நிலத்தில் பொருந்தியிருக்கக்கூடிய வஸ்துவைப் பொருந்துவோமாக.

### 12. ஔவதை யௌவாம்.

பா. அநேகர்கள் எவ்விஷயத்தை நம்புகிறார்களோ செய்கிறார்களோ, செய்திருக்கிறார்களோ அவ் விஷயத்தை நாமுஞ் செய்து சேர்ந்திருப்போமாக.

ஆ. சரீரம், பிராணன், மனது முதலிய காரணங்களையும் தானாகப்பார்த்துத் தனது சுதந்தர மிழந்து நின்ற அறிவை அகம்புறமில்லாது நிற்கின்ற அறிவினால் அதையே நினைந்திருப்போமாக.

### 13. கஷாயங் கதியிலை.

பா. எவ்விஷயத்திலும் மனது வருத்தமடைந்து கசப்பாகத் தோன்றிவிடுமாயின் அவ் விஷயத்தை ஆரம்பித்தல் கூடாது. ஆரம்பித்தபோதும் பூராவாக முடிவு பெறாதென் றறியக்கடவாயாக.

ஆ. அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், என்னு மைந்து கோசங்களையும் மனோவலியாலகற்றி அப்பாற் கற்பிதவடிவ சூனியத்தையு மகற்றி ஆன்மாவை நோக்கிச் செல்லும்போது முதலில் லயம், இரண்டாவது விக்ஷேபம், மூன்றாவது கஷாயம்,

நான்காவது ரஜாஸ்வாதம், இவற்றில் மூன்றாவதான கஷா யத்தின் மூழ்கிவிட்டால் முக்திநிலை கூடாதாகையால் லய விக்ஷேபரகித கஷாய நிலையானது முக்தி நிலை யல்லவாம்.

14. நனம்பதி நனங்கோள்.

பா. எவ்வகை மாதர்களும், புருஷர்களும், எச்சாதி யரும், எவ்விடத்தும், யாரும், தனது சொந்தமனைவி புரு ஷன் இவர்களைதவிர மற்றய ஸ்திரீ புருஷர்களைச் சொப்ப னத்திலுங்கூட நினையாது இன்னொரையே கொள்ளக் கட வர்களாக.

ஆ. முக்குணரகித ஆன்மாவில் நிலைத்த சாதுக்கள் கூட்டத்தின் அவதியே பதியின் லக்ஷணமாம். அப்பதியி னுதவியால் சாதுக்களினது லக்ஷியார்த்த வஸ்துவைக் கொள்ளக்கடவோமாக.

15 சத்துவ நிலஞ்சார்.

பா. சுத்த மனிதர்கள் மான்கள் வாசஞ் செய்யும் நிலத்திலும், யானைகளிருக்கு மூரிலும், தேவாலயங்கள் உள்ள பட்டணம் கிராமங்களிலும், மஹான்கள் வசிக்கும் ஸ்தலங்களிலும், நதிக்கரைகளிலும், முல்லை நிலங்களிலும், சார்ந்து வசிக்கக்கடவர்கள்.

ஆ. மூன்று குணத்திலு முற்குணமாகிய சாத்வீக முடிவில் விளங்கும் ஜீவன் முக்திப்பதத்தைச் சார்ந்திருப் பாயாக.

16. ஞரல்வலி ஞானம்.

பா. எந்த விஷயங்களையும் ஞானத்துடனும் திட தைரியத்துடனும் முயற்சித்து அவ் விஷயத்தை முடிக்கக் கடவராக.

ஆ. விசாலமான உலக இச்சைகளை விஷய தோஷ திருஷ்டி வைராக்ய பிரபல முயற்சியால் ஜயித்து முப்பத்

ந்தைந்து தத்துவமுந் தாண்டிய அவஸ்தையில் செய்யப்பட்ட மனோவிருத்தியே ஞானமென்றறியக்கடவாயாக.

17. அடம்பிடி யாதும்.

பா. ஓர் காரியத்தை ஆரம்பித்தபின் இடையில் பெரிய இடையூறுகள் வருமாயின் அவற்றிற்குப் பயந்து விட்டு விடாது ஈஸ்வர கிருபையின் பலத்தைக்கொண்டு வைராக்கியத்துடன் முயற்சித்தாயாகில் அக்காரியம் பூரணமாகுமென்றறிவாயாக.

ஆ. சரியை, கிரியை, யோகம், ஞானம், நிஷ்டை முதலிய மோக்ஷ சாதனங்களை வைராக்கியம் கொண்டு அப்பியாசம் செய்தால் அகண்டமான விதேக முக்திப் பதம் நமக்கே பொருந்துமென்றறிவாயாக.

18. குணம்பல கொள்ளேல்.

பா. அன்னியர்கள் வந்து பொருந்தி அவரவர்களுடைய உள் நினைப்புகளை நம்மிடம் கூறுவார்களாயின் அவ்வவற்றிற்கலங்கி அந்தந்த குணங்களிற் செல்லாதிருப்பாயாக.

ஆ. முக்குணங்களையும் அவற்றின் விகார குணங்களையும் சகுணநிர்க் குணங்களையும் பேதாபேத குணங்களையும் இன்னு மற்றுமுள்ள நானாவித குணங்களையும் ஆத்ம சொரூப சமஸ்கார மனதில் கொள்ளாதிருக்கக்கடவாயாக.

19. தத்துவந் தனியோர்.

பா. சரீர சுவாச ஜீவாதார தத்துவங்களை அது தெரிந்த பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்து தனித்து அதின் விஷயத்தைத் தெரியக்கடவாயாக.

ஆ. பிரபஞ்சம். ஸ்தூலம், பிராணன், மனது, அவித்தை, மாயை, பிரகிருதி, காலம் முதலிய தத்துவங்களையும் கடந்த தத்பத துவம்பத லக்ஷியார்த்த வஸ்துவின்

தத்துவம் ஏகாந்தமாகத் துரியாதீதத்தினிடத்துப் பொருந்தியிருக்கும் அவற்றையறிந்து கொள்வாயாக.

20. நயந்துறை நாடு.

பா. யாரிடஞ் சென்றாலுஞ் சத்துவ குணப் பிரதான வடிவமான மனது, வாக்கு, இவைகளுடன் நினைத்தல் பேசுதல் செய்து நாடி வருவாயாக.

ஆ. சயம், நயம், பயம், மயம் முதலிய ஜெயித்து அப்பால் நயந்து ஏதாவது ஓர் மார்க்கத்தில் நின்று அம் மார்க்க கழுவிய அவஸ்தையை நாடக்கடவாயாக.

21. பதிவளம் பாரேல்.

பா. புருஷனது லக்ஷணம் நடை முதலியவைகளை கற்பு வேண்டுமென்னும் ஸ்திரீகள் பாராதிருப்பார்களாக.

ஆ. ஜீவ மாயாவடிவமுந் தாண்டிய பதியினிடத்தில் சுத்தா சுத்த மின்றிய விடத்து அதைக் கற்பிக்கும் வழக்கங்களை நாடாதிருப்பாயாக.

22. மந்திர மதியேல்.

பா. அஷ்டாக்ஷரம், பஞ்சாக்ஷரம், ஏகாக்ஷரம், காயத்திரி முதலிய மோக்ஷ சாதன மஹா மந்திரங்களைப் பெரியவாளிடங் கேட்டுத் தெரிந்து அவற்றை மிகுந்த பெருமையுடனினைத்து வைத்திருக்குமாறு மனத்தை மதியாதிருப்பாயாக.

ஆ. பிரணவம், துவிதாக்ஷரம், பஞ்சாக்ஷரம், சடாக்ஷரம், சப்தாக்ஷரம், அஷ்டாக்ஷரம், துவாதசாக்ஷரம் முதலிய மந்திரங்களின் சூக்ஷும வடிவ காயத்திரி அதன் பூர்ண லக்ஷியார்த்த மஹா வாக்கிய நிலை இவைகளைத் தெரிந்து அனுஷ்டானித்து முடித்துவிட்ட பின்பு மேற்கூறிய மந்திரங்களை மதிக்காமல் விட்டுவிடுவாயாக.

### 23. அயத்துற வாகா.

பா. துஷ்டர்கள், வேசிகள், தாசிகள், மூர்க்க சுபாவஸ்தர், மாமிசபக்ஷணிகர்கள், பரதார கமனர்கள், இவர்களிடம் அதிகமுங் கொஞ்சமுமான சிநேகத்தை விட்டு விடுவாயாக.

ஆ. சர்வ தத்துவாதீத சாந்தியினிடத்துக் கற்பிதமான பிரபஞ்ச வடிவத்திற் சிறிதேனு மன்புகொண்டு சினேகிப்பதாகாதெனவறிக.

### 24. திரம்பதி தேடு.

பா. அவரவருக்குச் சொந்தமான மாதர், புருஷர், அவரவருக்குச் சொந்தமென்றும் திரமென்று நம்பி இருவருமொன்றுபட்டுஈஸ்வரனைத்தேடிக்கொண்டிருப்பீராக.

ஆ. அண்டம், புவனம், திரிமூர்த்திகள், ரிஷிகள், தேவர்கள், சித்தர்கள், எல்லாருடைய நிலைகுலைந்து மாண்டபோதும் அசையாதிருப்பதே ஸ்திரமாம். அத்தகைய ஸ்திரத்துடன் ஆன்மசொரூபத்தை விசாரிக்கக்கடவாயாக.

### 25. வலக்கணினேறு.

பா. சகோதரர்கள், புத்திரர்கள், மற்றெல்லாரிடமும் ஒருவரை ஒன்றும் மற்றொன்றுமாகப் பாராது எல்லாரையுஞ் சமமாக வலக்கண்ணுகவே பார்த்து அவ்விடத்தே தேறியிருப்போமாக.

ஆ. மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை, என்ற ஆறுதாரங்களிலும் சோடசகலைகளிலும் மனதை நிறுத்திக் கடைசியில் வலது சூரிய கலையின் மார்க்கமாகச் சுழுமுனைக்குங் கீழாகக் கீழ்வாசல் மார்க்கமாகப் பிடரிக்குச் சென்று ஆங்கிருந்து மாடந்தாண்டி அப்பாலேகுவாயாக.

26. வகையுடன் வருவீர்.

பா. தேவாலயம், பிரம்மாலயம், கர்ப்பஸ்திரீ, குழந்தை, அரசர், விருத்தர், உத்தியோகஸ்தர் இன்னோரிடங்களுக்குச் சென்றால் அவரவருக்குத்தகுந்த சாமக்கிரியைகளுடன் செல்வீர்களாக.

ஆ. விஷயங்களில் மயக்கமின்றி யிருத்தல் ஆன்ம அப்பியாச சாதனை, சாஸ்திர ஆராய்ச்சி உண்மை ஞானப் பயிற்சி, யோகானுஷ்டானம், கருமநியதி, குருவுபதேசம், அஷ்டாங்கயோகம், நிஷ்டை முதலிய மோக்ஷசாதனவகைகளுடன் பிரமானு சந்தான திட அப்பியாச புருஷப்பிரயத்தன பிரதிபந்தரகித ஆன்மாவின் வழியாக வரக்கடவாராக.

27. உழவற வுள்ளீர்.

பா. எத்தொழில்களைச் செய்ய ஆரம்பித்தபோதும் மத்தியிலும் முடிவிலும் மனது கலங்குவதை அறுத்து அக்காரியத்தைச் செய்து முடிப்பீராக.

ஆ. அனித்திய வஸ்துக்களில் மனதை நாட்டி அவ்விஷயங்களிலுள்ள பேதா பேத கற்பனைகளை யுணர்ந்து மாற்றி அவற்றையு மறுத்து ஆன்மானு சந்தான மஹா வாக்கியத்தை நினைத்திருப்பாயாக.

28. பளகறப்பாரீர்.

பா. இல்லறத்தார்கள் ஆஸ்ரம தர்மத்தில் அவ்வாஸ்ரமத்திற்கு விரோத விஷயங்களை முதலிற் பழகி பின்பவற்றைத் தள்ளி ஒழுங்குடனிருப்பாயாக.

ஆ. மனைவி, மக்கள், செல்வம், மாந்தர்கள், உலகம், சமயம், முதலிய உலக விஷய பழக்கங்களை மிகுந்து பழகி அவற்றிலுள்ள குற்றங்களையறுத்து அப்பாலுள்ள தன்னைத் தன்னாற் பார்க்கக் கடவீராக.

### 29. அறங்குலமாட்டு.

பா. யாவரும் தன் பக்கத்தில் வருபவர்களுக்குச் சக்தி மட்டுஞ் சாதி, குலம், தேசம், இடம், அந்தஸ்து முதலிய விஷயங்களைக் கவனியாது தர்மஞ் செய்யக்கடவீர்களாக.

ஆ. நித்தியமான தர்மசொரூபியாகிய ஜகத் ரக்ஷக வடிவ ஈஸ்வர லக்ஷியார்த்த பிரஹ்ம வஸ்துவை ஜாதி, குலம், மதம், தேசம், காலம், சரீரம் முதலிய அபிமானங்களை விட்டொழித்துப் பார்க்கக்கடவாயாக.

### 30. மனங்கெடமாகம்.

பா. எல்லோரும் மாசிமாதத்தில் வாராநின்ற சிவராத்திரி விரதத்தை ஆகமவிதிப்படி ஒழுங்குடனனுஷ்டித்து வர இதுகாலபரியந்தங் கெட்டலைந்த மனது சுத்தமடையும்.

ஆ. சூட்சும, பஞ்சபூத, அம்சபூத, ஞானேந்திரிய இராஜாங்க மனதானது ஆன்மானு சந்தான வாயிலாக நகிக்க மிஞ்சியிருப்பது மகத்துவமான ஏகவஸ்துவென்றறிவீர்களாக.

### 31. கரியிடங் காணேல்.

பா. மும்மதங்களையுடைய யானைவந்தால் அவற்றினிடத்திருந்து ஆயிர முழம் விலகிப்போவதுபோல அன்னமதம், மனோமதம், மாயாமதம் முதலிய மதங்களையுடைய அகங்கார யானையைக் கண்டு நெடுந்தூரம் ஓடிப்போகக் கடவாயாக.

ஆ. பிரபஞ்சம் ஜீவாஞ்ஞான மாயேஸ்வர தத்துவங்களைத் தாண்டி அப்பாலுள்ள சாக்ஷி வடிமான கூடஸ்தனது விசாலமான மாயாரகித வுண்மையை காணுவாயாக.

### 32. காசினி கண்டேர்.

பா. உலக விஷய பூரண லௌகீக விஷயங்களைத் தெரிந்துகொண்டு உலகத்தினுச்சியிலேறி தீரனுயிருக்கக் கடவாயாக

ஆ. அனித்த, அசுத்த, ஜடதுக்கரூபமான உலகத்தை ஆரோப பாவனையைக் கொண்டு பாராது அபவாதலக்ஷிய பரமாத்மாவாகப் பார்த்து நெருங்கிய துன்ப வடிவ ஜென்ம சமுத்திரத்தின் அக்கரையை யடைவீராக.

### 33. கிரகணங் கிட்டேல்.

பா. அவரவர்கள் பூர்வ கர்ம அனுசரணப்படி வாய்ந் திருக்கும் நவக்கிரக குற்றங்களை விலக்க அந்தந்த கிரகங்க ளின் பிராயச்சித்தஞ் செய்து அவற்றை கிட்டாதிருப் பாயாக.

ஆ. அனந்த ஜென்ம கர்ம பிரயோஜனகளி னனுபவ துக்க வடிவ அந்தக்காண விருத்தியை அற்புத மயக்க மன துடன் செல்லாதிருக்கக் கடவாயாக.

### 34. கீழிடங்கதியேல்.

பா. உலக விஷய மெதுவானுலும் மேலிருப்பதல்லா மல் அவற்றினின்று கீழிறங்கி அம்மார்க்கமாகச் செல்லா திருக்கக் கடவாயாக.

ஆ. இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி இம்மூன் றினுள் வசமாகப் பொருந்தியிருக்கும் குண்டலி சக்தியை மனோலய பிராணலய லக்ஷியார்த்த நாட்டத்தினுல் அதனு தாரமான கீழ் சென்று அதனுலச் சக்தியை வசமாக்கி நீண்டகாலத்திற்கு இச் சரீரத்தை நிலைக்கப்பண்ணி அத னுதவியாற் பிறவா முக்தியைப் பெறுவோமாக.

### 35. குவலயங் குறியேல்.

பா. எதார்த்தமாகச் செய்யப்பட்ட காரியங்களில் உலகத்தார்கள் ஏதேனுங் குற்றங் குறைகள் கூறுவார்களா யின் அவற்றைச் சிறிதுங் கவனியாதிருப்பாயாக.

ஆ. நித்திய பரமாத்ம வஸ்துவின் கற்பிதவடிவ மாயையின் கற்பித அவித்தியா மூல சகித அந்தக்கரண ஆரோபித யதார்த்த கானற்ஜல வந்தியாபுத்திரவடிவ இப் பிரபஞ்சத்தை கற்பிதவடிவமாகக் கருதாது ஆன்ம வஸ்து வாக எப்போதுஞ் சிந்தித்திருப்பாயாக.

### 36. கூடுதேற் கூடேல்.

பா. இல்லறவாசிகள் சொந்தமனைவியினிடம் அமா வாசை, பௌர்ணமை, ஏகாதசி, துவாதசி, அஷ்டமி, தசமி, பகல், திரயோதசி, ஜென்மநக்ஷத்திரநாள், மஹான் கள் ஆசிரியர்கள் அவதாரதினம், எண்ணெயிட்டுக் கொள் ளும் நாள், க்ஷவரம் செய்துகொள்ளும் நாள், வீட்டுக்கு அதிதிகள் வரும் நாள், சிராரத்ததினம்,கிரகண நாள்,பனி ரெண்டு மாதப்பிறப்புதினம், சிராவணதினம், தீபாவளி நாள், பனிரெண்டு மாதக் கார்த்திகை நாள், குரு அவதார நாள், மாதர்விடயான மூன்று நாள், நான்காம்நாள் இன் னுட்களைத் தவிர்த்து மற்றய நாட்களில் இரவு இரண்டு ஜாமமுந் தாண்டியபின்றும் மூன்றறை சாமத்துக்குள்ளும் சேர்தலை விட்டு வேறு அன்னிய மாதர்களைக் கூடாதிருப் பாயாக.

ஆ. எவ்விடத்தினின்று சர்வ தத்துவங்களுமுண்டா குமோ அவ்விடத்தில் மனதைவைத்து நாமும் அங்கே சென்று அதீத வடிவ ஆன்மானந்தத்திற்கூடி அப்படியே லயபடைந்திருப்போமாக.

### 37. கேத்துட கேதிசேர்.

பா. யாரிடம் சென்றாலும் நமது அந்தரங்க அபிப்பிராயங்களை வெளிவிடாது வாக்கில் உபோற்காதமாக மதிப்பாகப் பேசி அக் காரியத்தின் முடிவைப் பூர்த்தி செய்விப்பாயாக.

ஆ. மனோ தத்துவம், அவித்தையா தத்துவம் என்னு மிவ்விரண்டு தத்துவங்கட்குள் அடக்கமாகிய காமாதி விகாரங்களையுடைய பவரோகத்தையும், கெம்பீரமாகச் செயித்து உத்தம மோக்ஷத்தை யடையக்கடவீராக.

### 38. கேசரிகேட்டுறீர்.

பா. சிங்கமானது மற்றெல்லா மிருகங்களையும் தனக்குள் அடக்கியாளுவதுபோல எல்லாரையுமடக்கி நன்மார்க்கத்திற்குக் கொண்டுவரு மார்க்கத்தைக் கேட்டு அவ் வழி நடப்பீர்களாக.

ஆ. உள்வாசல் வழியாக மனதும் பிராணனும் சேர்ந்து சுழுமுனையிலேறிப் பிடரி மார்க்கமாகப் பிரமரந்திரத்திற் பிரவேசித்து ஆத்மாகார வடிவ சைதன்யமாய் நிலைத்தல் கேசரி முத்திரை, அல்லது, நாக்கின் வழலைச் சுத்தி செய்து பிராணனை உள்வாசல் வழி மேலேற்றி நாக்கினுற் றுவாரத்தை யடைத்துக்கொண்டு வியோம சக்கரத்தில் மனதை நிறுத்துதலும் கேசரி முக்திரை, இவ்விரண்டிலேதாகினு மப்பியாசித்து அதனப்பாலுள்ள அகண்ட முக்தியைக் கேட்டடைவீர்களாக.

### 39. கைவசமுணர்வோர்.

பா. உலக விஷயத்தில் எந்தப் பதார்த்தங்களானாலும் அன்னியரிடமிருக்கும் பொருள்களை விசுவாசித்து நிற்காமல் நம் கைவசமாக இருக்கப்பட்ட வஸ்துக்களையே நம்பிவருவோமாக.

ஆ. சதோயமான சாந்த வடிவ ஆன்ம சொரூபமே நாமென்னு மனுபூதி மார்க்கத்தைவிட்டு வீண் கரும சாதனங்களிலுழைத்துத் தன்னை மறந்து போகாமல் நமது கைவசமாயுள்ள நம்மைக் கொண்டே நம்மையுணர்ந்து ஒப்பற்ற ஒன்றோடு கலந்திருப்போமாக.

### 40. கொண்டது கொள்ளேல்.

பா. ஒரு வீட்டில் ஒருவன் ஒரு பெண்ணை விவாகஞ் செய்தபின் அதே வீட்டில் அவ் வீட்டுக்காரன் மற்றோர் பெண்ணையும் விவாகஞ்செய்யாதிருப்பானாக.

ஆ. மாயையின் ஆரோபித மனதின் சங்கற்ப விஷய பூர்வக இந்திரிய சுகங்களைக் கொண்டு உலக போகங்களை அனுபவிப்பதை விட்டு அப்பியாச அனுபவ விஷயங்களை யறிந்து அதனதிஷ்டான வடிவமாகக் கொள்ளக் கடவீர்களாக.

### 41. கோதறுங்கோடு.

பா. மனை, நிலம், செல்வம் முதலியவைகளைச் சகோதரர்கள் பக்ஷபாதமின்றி ஒழுங்காகப் பாகஞ் செய்து கொள்வார்களாக.

ஆ. அறிவின் சொரூப அத்தியாச விகார பிரபஞ்ச அன்னுவய அகண்டமில்லாத அவித்தையின் ஆரோபித மனதின் குற்றங்களை அபவாதத்தாலறுத்து அவ்வெல்லைக்குள் நின்று ஆன்மவடிவைப் பார்ப்பீர்களாக.

### 42. கௌவுதல் கடமை.

பா. எத்தொழில்களையும் பாரிடத்துக் கண்டாலும் அவற்றைத் தீரவிசாரித்து அவற்றிலுள்ள குற்றங்களைக் கண்டு விலக்கி குண சுபாவத்தையே ஏற்றுக்கொண்டு அப்

படியே அதைப் பிடித்துக்கொள்வதே நமது கடமையென் றறியக்கடவாயாக.

ஆ. சர்வ தத்துவ ரகித சமாதியானந்தானுபவ உதயஸ்தலத்தில் அவ்விடத்தே நின்று பிடித்து அவ் வடிவமே ஆகுதல் எல்லோருடைய கடமையேயாகும்.

43. சகசமே சார்வீர்.

பா. பிராமணர் முதல் சண்டாளர்வரையிலும் அசைவில்லாத அசர வஸ்துக்களிடத்தும் பக்ஷி மிருகம் முதலியவைகளிடத்தும் சாந்த பாவனையுடன் ஒற்றுமையுடனிருப்பாயாக.

ஆ. மஹா வாக்கிய அனுசந்தான வலியாலுதயமாகாநின்ற சவிகற்ப நிருவிகற்ப சமாதியின் முடிவான சகச நிஷ்டையின் ஆனந்த வடிவ சைதன்ய வஸ்துவைத் தானாக வாக்கி அதுவும் மறந்தவாங்கே யிருக்கக் கடவீர்களாக,

44. சாந்தமுஞ் சார்பார்.

பா. மேற்சொல்லிய சகச வடிவத்தின் சாந்தி சுபாவத்தையடைந்த பெரியோர்களிடம் அடிக்கடி சேர்ந்து அச் சாந்தியின் சாதன சார்பைப் பழகி வருவாயாக.

ஆ. ஜெகத் வடிவ அன்னிய மாயையின் கற்பித சொரூப அகண்டாகார மனோலய சாந்தியின் அந்தரங்க லக்ஷியார்த்த பிரஹ்ம சொரூபத்தின் அனுபூதி சாந்தமே சார்ந்து அஃதே யாகக் கடவீர்களாக.

45. சித்திகள் சேரேல்.

பா. கெஜகரணஜாலம், கோகர்ணஜாலம், மகேந்திரஜாலம், பீதாம்பரஜாலம், இந்திரஜாலம், மஹா மாயாஜாலம், ஒட்டியம், சல்லியம், பில்லி, சூனியம், ஏவல்,

ஆ. அணிமா முதலான அஷ்டசித்தி வடிவ அனித்த ஜடதுக்க சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் திரோபவம், அனுக்கிரஹ முதலிய சித்திகளையுஞ் சேராது அதனப்பாலமர்ந்துள்ளதிருக்கு சொரூப வஸ்துவைச் சேர்ந்திருக்கக் கடவீர்களாக.

46. சீதரன் சித்தோர்.

பா. வைகுண்டவாசரான ஸ்ரீமந் நாராயணனை என்னாளும் பஜித்து அவரை ஞானசொரூப பிரஹ்ம வஸ்துவென்றறியக்கடவாயாக.

ஆ. அவ்யக்தத்தின் அகங்கார கற்பித முக்குண மாயையின் முதல்வடிவ நாராயணனது அந்தர்பூத வடிவத்தை நோக்கில் எதார்த்த ஆனந்த சொரூப சைதன்ய பிரஹ்ம சொரூபமென்று உணரக்கடவீர்களாக.

47. சுற்றகஞ் சுற்றேல்.

பா. தனது சொந்தவூரில் தனது வீட்டைச் சுற்றிலுமுள்ள மற்றெல்லா வீடுகளிலும் அடிக்கடி சென்று வருதலும் வீட்டுக்கார நாயகரில்லாத நேரங்களில் அங்கு செல்லுதலுமொழிக்கக் கடவாயாக.

ஆ. விஷய வாதனை வசமாக ஓடிக்கொண்டிருக்கு மனத்தை அவ்விஷயங்களினின்று திருப்பி அந்தரங்க அனுபூதியிற் சொக்கி அவற்றையுந் தவிர்த்து அங்ஙனமிருப்பாயாக.

48. சூதுறுஞ் சொன்னேன்.

பா. நம்மிடத்திலிருக்கப்பட்ட செல்வம், ஸ்திரி, முதலிய உலக விஷயபோக சாதனங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு அன்னியர்கள் கபடமாக நம்மிடத்திற் சிநேகிக்க வருவார்கள். அவற்றைச் சூதாகக் கவனித்து அவற்றினின்றும் தப்பித்துக்கொள்வீர்களாக.

ஆ. அன்னமயமுதல் ஆனந்தமயம் வரை தாண்டி அப்பாற் செல்ல அங்கொரு வெளிதோன்றும். அப்படி வெளி மூன்றுந்தள்ள அங்கிருப்பது சூதான ஓர் சூனிய வடிவாம். அதில் மயங்காது அப்பாற் செல்லவேண்டும் இவ்வாறிதென்று அறியக்கடவீர்களாக.

49. செத்தவர்சேரார்.

பா. மனுஷ்யர்கள் பிராரத்த கருமத்தால் இறந்து விடுவார்களாயின் வீணாக அழுது உழன்று கதறி அழுது கொண்டதால் திரும்பி வாரார்களாகையால் அவற்றைநீங்கி யிருக்கக் கடவாயாக.

ஆ. இந்திரியம் சரீரம், பிராணன், மனம், விஞ்ஞானம், அஞ்ஞானம், பிரகிருதி, ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம், ஸ்தூலம், சூக்ஷூமம், காரணம், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி இவைகளையெல்லாம் ஞானனுபூதி மனேதிடத்தாலும் ஈஸ்வர காருண்யத்தினுலும் கொன்று அவற்றையுந்தாண்டிச்சென்றவர்கள் திரும்பவும் எவ்வகை உலகங்கட்கும் போய்ச் சேரார்கள்.

50. சேர்தலுஞ் சேரேல்.

பா. துஷ்ட மிருகங்களையும் மாதர்களையும் புருஷர்களையும் மற்றுமுள்ளோரையும் சேர்ந்துஞ் சேராதிருப்பீர்களாக.

ஆ. பிரஹ்ம கற்பித மாயைகளும் அதன் விகாரங்களையும் மற்றும் பாபபுண்ணியச் சேர்க்கைகளையும் சேராது வைகுண்ட கைலாச பிரமலோக சொர்க்கலோக முதலிய பிரபஞ்ச இடங்களையும் சேர நினையாது அவற்றை யெல்லாந் தாண்டிய அவ்விடத்திற் சேர்ந்திருப்பாயாக.

## 51. சைவலஞ் சரியேல்

பா. யாராலுஞ் சீ சீ, என்று தள்ளத்தகுந்த யாவ சாயினும் அவரைச் சிநேகஞ் செய்து அவர்களுடன் கூடி யிருக்கின்ற சுபாவத்தை விட்டுவிடுவாயாக.

ஆ. விஷயங்களில் வைராக்கியத்தைச் செலுத்தி மண், பெண், பொன் இம் மூன்றையுஞ் சையென விட்டு சாந்த சுபாவத்தோடு சற்குருவைக் கிட்டி பிரஹ்மோப தேசம்பெற்றுப் பிராணனை வலது மார்க்கமாகச் சூரிய கலை யிலே செலுத்திப் பெரிய சுழுமுனை நாடியால் மாற்றியங் ஙனே யிருப்பீர்களாக.

## 52. சொந்தமுஞ் சூதூழ்.

பா. பிரபஞ்சத்திலுள்ள நாம் நமக்குச் சொந்த மென்று நினைத்துக்கொண்டிருக்கிற மனைவி, புத்திரர், செல்வம், மனை, நிலம், சுற்றம், பரி ஜனங்கள் இவர்களெல் லாம் வினைமுடியுங் காலத்துச்சூனியமாகப் போய்விடுவார்க ளென்றறியக் கடவார்களாக.

ஆ. நான் எனது என்னும் சொந்தமான ஞானப் பிரபந்திகளைவிடுத்து அப்பாற் சொந்த நிலைமையையறிந்து கொள்ள முயற்சித்து அப்பியாசித்து நிற்கு முடிவில் ஒன் றுந் தோன்றாத ஓர் அவஸ்தையுண்டாகும். அதையுங் கடந்து விசாரித்து அப்படியில் நிற்பாயாக.

## 53. சோதனஞ் சோரேல்.

பா. எந்தக் காரியத்தையும் ஆரம்பிப்பதற்கு முன் அதன் முடிவை விசாரித்து நன்றாய்த் தெரிந்துகொண்டு ஆரம்பித்தல் வேண்டும். அஃதன்றி இடையில் சேர்ந்து விடப்படும் காரியங்களில் பிரவேசியாதிருக்கக் கடவாயாக.

ஆ. தத்பத துவம்பத வாச்சிய லக்ஷிய அனுபவ விசாரணை செய்து சோதனஞ் செய்து அவ் விசாரணுவடிவ சாந்தியிலுதயமாகா நின்ற அவதியினின்று கொண்டு யாதொரு விஷயங்களுக்கும் பயப்படாதிருப்பாயாக.

54. சௌசமுஞ் சரிப்பீர்.

பா. நாள்தோறும் ஸ்தூல சரீரத்திலுள்ள மல ஜல விசர்ச்சனஞ் செய்தவுடன் அவ்விடத்து மண்ணாலும் ஜலத்தாலும் சாஸ்திரத்திற் கூறப்பட்ட சௌச விதிப்படி சுத்தஞ் செய்வீராக.

ஆ. பஞ்சபூத பஞ்சீகரண விகார ஸ்தூலசரீரத்துக்கு மண் ஜலம் போட்டுச் சுத்தஞ் செய்வது போல சூக்ஷ்ம சரீர ஆதாரமான மனம் அவித்தை முதலிய மலம் போவதற்கு ஆத்ம நிஷ்டை, ஆத்ம தியானம், ஆத்ம விசாரணை, ஆத்ம நாட்டம் முதலிய மண் ஜலங்களால் ஆந்தரத்தைச் சுத்தஞ் செய்து அதனைப்பாற் சென்று சஞ்சரிப்பீர்களாக.

55. தக்கது தனித்துள்.

பா. தனது புத்திரனுக்கு விவாகஞ் செய்ய வேண்டில் தன் குடும்ப அந்தஸ்து, செல்வம், ஆசாரம், குலம், நாகரீகம், ஜனக்கூட்டம் முதயவைகளுக்குத் தகுந்தவாறு தனது சொந்த பந்து ஜனங்களோடும் மித்திரர்களோடும் ஏகாந்தமாக ஆலோசித்து அக் காரியத்தைச் செய்து முடிப்பீராக.

ஆ. சாதனனுபூதிபாவிச்சதா சிந்தித்துச் சகசமான மனதுடன் சாந்தி நிலை பெற வெண்ணித் தகுந்த மனனுகரண மயக்க நழுவித் தனித்த ஏகாந்த ஸ்தலத்தில் ஆதனமிட்டுட்கார்ந்து நிமிர்ந்து மனதைத் தன்னிடத்தில் நினைந்திருப்பீர்களாக.

56. தானிடந் தன்னுள்.

பா. தனக்குச் சொந்தமாயுள்ள பதார்த்தங்களெல்லாவறறையும் தன்னதாகப் பாவித்து அதனதன் விஷயங்களைப் பூர்த்தியாகத் தனக்குள்ளே ஆலோசித்து அக் காரியத்தைக் குறைவறச் செய்து சாதிப்பீர்களாக.

ஆ. அவித்தியா கற்பித உபாதி சகித ஜீவ சொரூபமாகிய ஆன்ம வடிவமாகிய தன்னுள் தத்பத லக்ஷியார்த்தமாகிய பிரஹ்ம வடிவம் தங்குவதற்குத் தகுந்த இடமாம். அங்கு சென்று அதனுள்ளே புகுந்திருப்பாயாக.

57. திகம்பர முடிவேர்.

பா. ஒரு விஷயத்திலு மனது மயங்காமல் திடமாக ஈஸ்வரனை நினைத்து அக்காரிய முடிவுவரை அந்த முயற்சியை விடாதிருப்பாயாக.

ஆ. சர்வ தத்துவங்களு நழுவிய சொச்சொரூபமாகிய நிருவாண பதத்தின் முடிவைக் கண்டு அதனுள்ளேறியிருப்பாயாக.

58. தீர்வது தீரம்பார்.

பா. உனது சொந்த மனைவி, புத்திரர், செல்வம், பந்துக்கள் இன்னு மற்றையோர்கள் எல்லோரும் அவரவர்கள் கூட்டுறவின் கர்மவாசனை முடியுங்காலத்தில் எல்லோருந் தீர்ந்து நாசமடைவது நிச்சயமென்று உன் வேலையை நீ செய்வாயாக.

ஆ. அஞ்ஞானத்தின் அம்ச பூதவடிவ சர்வதத்துவங்களும் குருவின் அனுக்கிரக ஞானனுஷ்டான அனுபூதி மார்க்கத்தில் நிஷ்பிரதிபந்த யதார்த்த அக்கினியால் அஞ்ஞானமும், அதன் காரியமாகிய பிரபஞ்சமும், அதனுள் வீடாகிய அந்தக்கரணமும், ஜெனன மாணதுக்கங்களும்

தீர்ந்துவிடுவது ஸ்திரமானபின் அப்பாற் போய்ப்பார்க்கக் கடவாயாக.

59. துரிசறவானோர்.

பா. லௌகிக எவ்விஷயங்களையும் அவற்றி னாரம்ப முதல் முடிவுவரையுள்ள துக்கங்களை விசாரித்து அவற்றி லனித்திய புத்தியை யுண்டாக்கி அவைகளை யெல்லாஞ் சூனியமாக இல்லாததாக நிச்சயிக்கக் கடவாயாக.

ஆ. பூதாகாயம், தகராகாயம், கடாகாயம், மாகூஷாகாயம், ஜீவாகாயம் முதலிய ஆகாயங்களுக்கு ஆதாரமான சிதாகாயத்தை அதாவது ஞானகாயத்தைத் தானாக நிருவிகற்ப சமாதியாலுணர்ந்து தன தன்னிய விகார சூனிய வஸ்துக்களை யெல்லாம் பற்றறவிடக் கடவாயாக.

60. தூவிடந் துரியமேண்.

பா. எவ்விடத்தில் மஹான்கள் வசிக்கின்றார்களோ வசித்திருக்கின்றார்களோ அவ்விடமே மேலான பரிசுத்த பூமியான புண்ணிய க்ஷேத்திர மென்றெண்ணக் கடவீர்களாக.

ஆ. மனதிற்குத் துக்கத்தை விளைவிக்கக் கூடிய அசுப காரியங்களை விடுத்து சுத்தகாரியங்களைப் பழகி அவற்றையுந் துக்கமென்று தள்ளி அதனப்பால் ஆன்ம விசாரணை செய்து அதன் முடிவில் விளங்கா நின்ற துரியானுபவத்தில் நிலைத்து அங்ஙனமிருப்பாயாக.

61. தெரிசனந் தெளிவாய்.

பா. எவ்விடத்துச் சென்றாலும் ஈஸ்வராலய க்ஷேத்திர விக்கிரகங்களையும் பெரியோர்களையும் அப் பெரியவர்களின் மகத்துவ நூல்களையும் அந் நூல்களினுள் விஷயங்களையும் கண்டு தெளிந்து, தேர்ந்து, முடிவை யறிந்து கொள்வாயாக.

ஆ. வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தம் என்னுங் கன்மேந்திரியம், சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்நுவை, ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியம், பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன் என்னும் வாயுக்கள், வித்தியா தத்துவம் பாசதத்துவம் மனோதத்துவம் இவைகளைத்தாண்டிச் சூனிய தரிசனஞ்செய்து அவற்றையுந் தன்னுளேகற்றி அங்ஙனே தெளிந்து தானுயிருப்பாயாக.

## 62. தேய்வுறுந் தெளிவீர்.

பா. நாள்தோறும் அதிகாலையிலெழுந்திருந்து ஓம் என்னும் பிரணவ மந்திரத்தையாவது, ராமா, என்னும் தாரக மந்திரத்தையாவது, ஹரி, என்னும் துவிதாக்ஷரத்தையாவது, நாராயண, வென்னும் நான்கக்ஷரத்தையாவது, நமசிவய, என்னும் பஞ்சாக்ஷரத்தையாவது, சரஹணபவ வென்னுஞ் சடாக்ஷரத்தையாவது, ஓம் நமோ நாராயணயா வென்னும் அஷ்டாக்ஷரத்தையாவது, ஓம், நமோ பகவதே வாசுதேவாயா வென்னும் துவாதசாக்ஷரத்தையாவது. ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே, என்னும் கலிசந்தாரண மந்திரத்தையாவது மற்றும் காயத்திரி முதலிய இன்னும் அநேக அரிய பெரிய மந்திரங்களையாவது சதாகாலமும் குருவினுபதேச வாயிலாக அதனதன் தாத்பரியங்களுடன் கேட்டு அனுஷ்டித்து வருவார்களாயின் மனதும் அதன் விகாரங்களும் கொஞ்சங் கொஞ்சமாகத் தேய்ந்து சித்தம் தெளிந்துவருமென் றறியக் கடவீராக.

ஆ. அநேககால அநேக ஜென்ம விஷய முயற்சிகளை அதிககால திடாப்பியாச அனுபூதி ஞான முயற்சியால்

தெளிந்து அதன் பிரதிபந்தங்களான எல்லாவற்றையுந் தேய்வடையச் செய்து அதனப்பாற் போயமர்ந்திருப்பாயாக.

63. தைனியந் தாழ்வுறும்.

பா. நமக்குக் கிடைத்த உலக போக விஷய சுக சாமக் கிரியைகள் ஒரு காலத்தில் நம்மையுங் கேட்காது தானே ஓடிவிடு மென்று தாழ்ந்து அறியக் கடவீர்களாக.

ஆ. பரமார்த்த சற்குருவின் அனுகிரக பலத்தால் பற்றற்ற நிலையைப் பெற்று அதனாலுண்டாகும் ஞான மகிமையால் எல்லா விஷய மயக்கங்களும் தாழ்வடைந்து நசித்துவிடும். அத்தகைய நிலையிலிருக்கக் கடவீர்களாக.

64. தொல்பதியாடார்.

பா. பரம்பரையாகப் பெரிய குடும்பஸ்தர்களாகியும் பிரபுக்களாகியும் ஆசார சிலர்களாகியும் பரிசுத்தர்களாகியும் தைரியவான்களாகியும் உள்மனதுடையவர்களாகியுமிருக்கப்பட்ட பெரிய நிஷ்காம கர்மிகள் குலத்திற் ஜனித்திருக்கின்றவர்களிடத்து எப்போதுஞ் சேர்ந்து கொண்டிருக்க வேண்டு மென் றறியக்கடவாயாக.

ஆ. பழமையான காலத்தில் இரண்டில்லாது ஒன்ருக விருந்த பரமாத்மா தன்னை ஓர் ஜீவனுக நினைத்துக்கொண்டது. அதை விடுத்து நாம் யார் உலக மியாது என விசாரித்து அவ் விசாரணையின் பலத்தால் ஆதியினுமிருந்த பழய நிலைமையைக் கண்டு அவ் வடிவமேயாயிருப்போமாக.

65. தோய்தலு மின்றூண்.

பா. நாடோறு முன் சொன்ன விதிப்படி சொந்த மனைவியினிடஞ் சாருங்காலத்து மனது ரம்மியமாயும் இட

மாயுந் தோய்ந்து முடிவிலுடனே அரை நாழிகை கழித்துப் பரிசுத்தமான சீதள ஜலத்தில் ஸ்நானஞ் செய்யாது எச்சிற்கூட உமிழாதிருப்பானாக.

ஆ. மூன்று சரீரங்கள், மூன்றவஸ்தைகள், ஐந்து கோசங்கள், ஆறுதாரங்தள், பதினாறு கலைகள் இவைகளை மனோவவியாலகற்றி அப்பாற் றோன்றுவைகளை யெல்லாந் தோன்றுமலாக்கி ஆங்கு சென்று ஆத்மானந்த அனுபூதியி லழுந்தி அனுபவித்தோமென்ற சங்கற்பமுமின்றி அவ்வித்தி லகண்டாகார நிலைமையைப் பெற்றங்ஙனே யிருப்பாயாக.

### 66. தௌவலுந் தன்னால்.

பா. எந்தக் காரியங்களிலும் பெரியவனாதலும் சிறியவனாதலும் நல்லவனாதலும் கெட்டவனாதலும் மேன்மை தாழ்மையாதலும் அவனது சரீர நடக்கையாலும் வாக்கின் வசனங்களாலும் மனோ குணங்களாலும் வந்து பொருந்து மென்றறியக் கடவாயாக.

ஆ. மாயா மயக்க அனுபூதிரகித, அவ்யாகிருத, வடிவ ஆனந்த, சொச்ச, அகண்ட வியாபக பலத்தால் சம்சார சாகரத்தைத் தாண்டுவதும், அன்னியமில்லாத நம்முடைய பலத்தாலென்று தன்னை யுணர்ந்திருப்பாயாக.

R6 N28

### 67. நமையலாதொன்றிலை.

பா. எங்கு சென்றாலும் நாம் செய்யவேண்டிய எவ்விதக்காரியங்களையுங்குறைவின்றிச் செய்துமுடிக்க நம்மையல்லாது அன்னியர்களுதவி ஒருக்காலத்திலும் இல்லை யென்றறியக் கடவீர்களாக.

ஆ. அத்வைத விளக்கமான அகம் புற விளக்க ஆன்ம வஸ்துவைத் தவிர அன்னியமில்லாத நம்மை நாமு

183884
சென்னை 600 008

ணர்ந்து நம்மால் நம்மையன்றித் திரிமூர்த்திகளும், பிரபஞ்சங்களும் வேறாக இல்லையென்று அனுபூதியிலாழ்ந்திருப்பாயாக

68. நாட்டமு நவோர்.

பா. ஏதாவது நியாயஸ்தலத்துக்குச் சென்று அங்கு உன்னை நியாயாதிபதியாக வைப்பார்களாயின் அந்த நியாயத்தில் இரண்டு கக்ஷிக்காரர்களுக்கும் நடு நிலைமையாக இருக்கக்கடவாயாக.

ஆ. மாயைக்கும் அவித்தைக்கு மத்தியிலும், இரண்டு சங்கற்பங்களுக்கு நடுவிலும், ஞானஞ்ஞான மத்தியிலும், விகஜிதமாய் நினைப்பில்லாததாய் இருக்கப்பட்ட பரவஸ்துவினிடத்து மனோ நாட்டத்தை மதித்து நிறுத்தி அது நாமாவோமாக.

69 நிர்க்குண நேர்மை

பா. எப்போதும் பிரஹ்ம சொரூபர்களான ஸ்ரீமந் நாராயணன், சிவபெருமான், கணேசன், சுப்பிரமண்யன், பைரவன், மற்றுமுள்ள தேவர்களையும் ஒழுங்காக நாடோறும் ஆலயத்துக்குச் சென்று திரிகரண சுத்தியுடன் வணங்கி வருவாயாக.

70. நீரிடங் காண்பாய்.

பா. பரிசுத்தமானதும் வியாதியுண்டாக்காததும் ரம்மியமானதும் ஜலம் பொருந்திய மேடான நிலத்தில் எப்போதும் வசிக்கக்கடவாயாக.

ஆ. வாக்கு மனது மற்றவிடம், அவ்யாகிருத இடம் அகண்டஇடம், சுகாதீதஇடம் முதலிய இடங்களிலறிவை நிறுத்தி அவ்விடமுந் தாண்டிய அவ்விடத்தில் நீங்கள் உங்களைக் காண்பீர்களாக.

71. நவலுவதெங்ஙன்.

பா. நமக்குச் சொந்தமான மனே, நிலம், முதலியவைகளை நாம் பார்த்து இது என்னுடையது என்று கூறுவோமாயின் அது நம்மைப்பார்த்து ஏளனம் பண்ணிச் சிரிக்கின்றது. ஏனெனில் நானுண்டான காலத்திலிருந்து எத்தனையோபேர்கள் இதுவரை இங்கு வந்து இன்னிலத்திற்குச் சொந்தமானவர்கள் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆதலால் இவன் சொல்வதெப்படியென்று சிரிக்கிறது. ஆனபடியால் அவற்றை நீக்கி யிருக்கக் கடவாயாக.

ஆ. அவாங் மனோவகோசர பரம வஸ்துவினிடத்துள்ள இரகசியங்களை மனதால் நினைப்பது தானெப்படி வாயாற் கூறுவது தானெங்ஙனம் என்று அவ்விடத்துத் தானே தனித்துணர்ந்து தானே தன்னிற் பேசியிருப்போமாக.

72. நூதனமலதோர்.

பா. உலகவிஷய அதியாச்சரிய விஷயங்களை நீபார்ப்பாயேயானல் அவற்றை இது புதிதான காரிய மென்று நம்பி ஆழ்ந்து விடாதிருக்கக் கடவாயாக.

ஆ. பரம ஜோதியை அறிந்த பெரியோர்களிடம் கேட்டும் அனுபவ சாஸ்திர தாத்பரிய நாட்டத்தினலும், தன்னுடைய அனுபூதி வடிவ ஏகவஸ்துவை யடைந்து விட்டாலும் அது புதிதான காரியமல்ல. பின்னே, எப்போதுமுள்ளதை மறந்து விட்டோம். அதை இப்போது ஞான ஞாபகப் படுத்திக்கொண்டோ மென் றறியக்கடவாயாக.

73. நெறியிது நில்லு.

பா. பராசரர், வியாசர், முதலிய மஹ ரிஷிகளாற் கூறப்பட்ட ஸ்மிருதிகளாலும், ஆகமங்களாலும், இதிகாச

புராணங்களாலும் கூறப்பட்ட வருணச்சிரம தரும விதிப்படி அற்பமேனும் நழுவாது அம் மார்க்கத்தில் அனுசரித்து நடப்பாயாக.

ஆ. தொண்ணூற்ரூறு தத்துவங்களேயும் விசாரித்துத் தள்ளிவிட்டு ஞான மார்க்கத்தை அறிந்து அப்பியாசிக்கு முடிவில் விளங்கும் பதியான வவ்விடமே பற்றி அவ்வழியே நாடோறும் பயின்று அதனவதிரூப அனுபவ மயமாய் நிற்கக் கடவோமாக.

74. நேயமுநேர்வாய்.

பா. யாராருக்கு எங்கெந்த முறைப்படி செய்ய வேண்டிய கடமைகளுண்டோ அவற்றைத் தவராது முறையாக ஜாதி, குலம், தேசம், காலம் முதலியவைகளுக்குத் தகுந்தவாறு நேர்மையுடன் செய்யக் கடவாயாக.

ஆ. சங்கற்ப விகற்ப வடிவ அந்தக்காணத்தை சங்ற்ப உற்பத்தி ஸ்தானத்தில் நிறுத்தி நெடுங்காலம் பழகி அப்படி நிலேத்த அவதியின் ரூப சாந்தியின் வடிவப் பழக்கத்தையே சகோதானுகக் கொள்ளக் கடவோமாக.

75. நைதலு நன்ருேர்.

பா. மனேவி முதலிய விஷய போக சுக சாதனங்களிலும் மற்று முள்ள போக சாமக் கிரியைகளிலும் மனதிற்குத் துக்கந் தோற்றி அதுகளிலுள்ள அற்ப அனித்திய விஷயங்களே அடிக்கடி விசாரிப்பது மிக்க நன்மையென்றெண்ணக்கடவாயாக.

ஆ. அனித்திய வுலக விஷய போக சாதன வடிவ சரீரத்திலும், ஜனன மாணங்களிலும், பெண்களிடத்தும், அசுத்த அதிருஷ்டி வடிவமும் பொருந்திப் பெரும் பாரமாகத் தோற்றியபடி நைந்திருத்தலே ஆன்மாவை படைவ

தற்கு நேர் சாதனமாகையால் அதை அடிக்கடி எண்ணி அப்படி யிருத்தலே நன்றென் றறியக் கடவாயாக.

76. நோய்யறி வுடமை.

பா. தார புத்திராதிகளைத் தனக்குள் ளடக்க வேண்டிலவர்களைச் சூட்சும புத்தியால் திருப்பி இசைவுடன் நல்வழிக்குக் கொண்டுவரும் புத்திசாலித் தனத்துடன் இல்லறத்தாரிருக்கக் கடவாராக.

ஆ. உலக முதல் மாயை வரை ஒன்றுக் கொண்டு பெரிதும் சூட்சமமும் வியாபகமுமா யிருக்கின்ற இவற்றிற்கெல்லாம் அதிஷ்டான வடிவமாயும், சாக்ஷி சொரூபமாயுஞ் சூட்சமமாயுமிரு நின்ற வஸ்து எதுவோ அதில் அறிவை நிறுத்தி அப்பியாசித்து அவ்வறிவே வுடைத்தா யிருப்போமாக.

77. நோவிலே நுங்கு.

பா. ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம் முதலிய அதைரியச் செய்கைகளை மிகவும் அதிகமாக்காமலும் நிரம்பக் குறைத்து விடாமலும் அனுபவித்து வருவீர்களாயின் உங்களுக்கு ஓர் காலத்தும் மோர்வித நோயு முண்டாகாதென் றறிவாயாக.

ஆ. ஸ்தூல சரீரத்துக்கு வாதம், பித்தம், கபம் என்னும் மூன்று வியாதிகளும் அவற்றினுள்ளீடான நாலாயிரத்து நானூற்று நாற்பத்து நாலு நோய்களும் இன்னும் மனோ வியாதியும் ஜென்ம வியாதியும், தங்குவவற் கிடமான அவித்தையின் பரிணாமத்தை விலக்கி ஒருநோயு மில்லாத ஆன்ம சொரூபத்தில மனதைக் கறைத்து பிரஹ்ம வடிவத்தில் ஆழ்ந்திருப்போமாக.

78. நௌவுதனன்றேல்.

பா. தனக்குத் தாழ்ந்த கல்வி, செல்வம், நிலம், அந் தஸ்து முதலியவர்களைக் கண்டால் சிரித்து அவர்களை ஏள னஞ் செய்யாதிருத்தலே நன்மையென் றறியக் கடவாயாக.

ஆ. ஞானனுபூதி இரகசியார்த்தங்களை ஞானி களி டங் கேட்டுத் தெரிந்து அதன் பலத்தால் அஞ்ஞான அம்ச பூத விஷய ஞானேந்திரிய, கருமேந்திரிய, அந்தக்கரண, பிராண பஞ்சக முதலிய தத்துவங்களைப் பார்த்து இனி எங்களால் உன்னைத் தாக்குதல் முடியாதென்று தன்னி லையி னின்று கொண்டு அற்புதமாகச் சிரித்துக்கொண்டி ருப்பதே மிகுந்த நன்மையென் றறியக் கடவாயாக.

79. பக்குவம் பார்க்கும்.

பா. நமது சரீரம் நம்மை விட்டு நீங்காதென்று நிச் சயித்திருக்கும்போது எவ்வளவு காலம் வரை நியதியின் பக்குவ மிருக்கின்றதோ அதையே சரீரம் எதிர்பார்த்துக் கொண்டிருக்குமென் றறிவாயாக.

ஆ. எல்லாங் கடந்த இறைவனிடத்து எப்போதுஞ் சம்பந்தித்துக் கொண்டிரு நின்ற மாயையின் கால சக்தி யின் சங்கற்ப வடிவ ஜகத்ரக்ஷக ஈஸ்வரனது கிருபை சர்வ ஜீவர்களிடத்திலு மிருந்தாலும் ஞான முதயமாவதற்கு முதலில் சரீரம், உலகம், இவைகளில் வெறுப்பு, பாபபுண் ணிய சமத்துவம், மலத்தின் பிரிவு, அருட்சேர்க்கை இவ் வளவும் கூடிய பக்குவ காலத்தை எதிர் பார்க்குமென் றறி யக் கடவாயாக.

80. .பாவனம் பதியேல்.

பா. அன்னியருடைய ஸ்திரிகளைக் கண்டு மனதில் கூட இச்சையின் பாவனை செய்தலும், மாற்றுறைக் கெடுக்க

வேண்டுமென்னும் மனோ பாவனையும் அற்றிருக்கக் கட விராக.

ஆ. உலகம், சரீரம், ஜீவன், அவித்தை, நித்திய வனித்தியம், முதலிய பாவனைகளும் விட்டொழித்து அபா வனையின் வடிவத்தைத் தன்னுள் கொள்ளக் கடவாயாக.

81. பித்தனு மாவார்.

பா லௌகிக உலக விஷயமும், வைதீக சாஸ்திர விஷயமும், யதார்த்தமான அளவிறந்த கல்வி விஷயமும், கற்றுணர்ந்தவர்கள் தனது சாமர்த்தியத்தை டம்ப நிமித்த மாக வெளிக்குக் காண்பிக்காமல் பித்தனைப் போன் றிருப் பாரென வறிக.

ஆ. சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவா பத்தி, அசம் சத்தி, பதார்த்த பாவனை, துரியம், துரியாதீ தம் முதலிய இரகசிய விடங்களைத் தெரிந்து கொண்ட ஞானிகள் உலகத்தார் தனது உண்மை நிலையை யறிந்து கொண்டால் விவகார மதிகமுண்டாய் ஆத்ம சுகங் குறைவு படுமென்று ஒன்றுந் தெரியாத அறிவில்லாதவர் போல் உலகத்திற் சஞ்சரிப்பாரென வறிக.

82. பீடுதல் பிசகு.

பா. கிரஹஸ்தர்கள் தனது குடும்ப நிலை, திரவிய நிலை, கீர்த்திநிலை, முதலிய நிலைகளை இருந்த நிலையிலிருந்து மேலாக்கு முயற்சி நழுவிக் குறைவுபடு முயற்சியை விட்டு விடாதிருத்தல் பெரிய தப்பிதமென் றறியக் கடவாயாக.

ஆ. ஜெகத்தில் மாதர்கள் அடிக்கடி புத்திரர்களைப் பெறுதல் போல ஞானிகளும் அடிக்கடி தன்னிடத்தி னின்று சங்கற்ப விகற்ப மாயா மயக்க பிரபஞ்ச புத்திரர் களைஉண்டாக்குகிறார்கள். முதலில்ஸ்திரீ புத்திர னுண்டாவ

தற்கு முக்கிய காரணம் புருஷ சம்பந்தமே, இங்கும் உலக புத்திரனுண்டாவதற்குக்காரணம் மாயையின் சேர்க்கையே ஆதலால், அச் சேர்க்கையை விட்டொழித்து அதனப்பாற் சென்று அங்கு நின்றுங் கீழிறங்குவது பெரிய தப்பாதலால் ஆங்கே நிலைத்திருப்பாயாக.

83. புருவத்தினடுவேள்.

பா. சர்வ மனிதர்கட்கும் அறிவிருக்கும் ஸ்தானம் நெற்றியின் கீழ்ப்பாகத்திலுள்ள சுழுமுனை நாடி யாதலால் இரண்டு புருவமத்தியஸ்தான இடத்தில் மனதை வைத்திருக்கக் கடவாயாக.

ஆ. நாடி எழுபத்தீராயிரம், வியாதி நாலாயிரத்து நானூற்று நாற்பத்துநான்கு, வாயு பத்து, இன்னுமற்றுமுள்ள தத்துவங்களும் நிறைந்திருக்கப்பட்ட ஸ்தூலசரீரத்தின் இரண்டு காற் பெருவிரலினின்று ஆரம்பித்து இரண்டும் மூலாதாரத்திற் சந்தித்து முதுகு மார்க்கமாகப் பிடரி வழிக்குச் சென்று பிரமரந்திரம் போய் மூக்கு நுனி வரையிற் படர்ந்திருக்கும் நாடி சுழுமுனையாம், இவற்றின் முக்கியஸ்தானம் நெற்றியிலுள்ள இரண்டு புருவத்திற்கு மத்தியமான உள்ளே சென்று ஆங்கிருப்பதுவே கேசரி முத்திரையின் ஓர்வித லக்ஷணமாம், என்றறியக் கடவாயாக.

84. பூரகம் புரிவீர்

பா. இமய நியமமிரண்டுந் தாண்டிய பின் ஏதாவதோராதனத்திருந்து பிராணாயாமத்திலொரு கூறாகிய பூரகத்தைக்கும்பக வலியாற் சித்தி செய்துகொண்டு அங்ஙனேயிருப்பாயாக.

ஆ. சங்கற்பமென்னும் பூரகம், விகற்பமென்னு மிரேசகம், இரண்டையுமடக்கலென்னுங் கும்பகம், இவைகளில் பூரகத்தை முதலிலடக்கித் தானே தானாயிருப்பீர்களாக.

## 85. பெட்புடன் பேரேல்

பா. யாருனக்கு என்ன தீங்கு செய்யினும் முன்னிருந்த நிலைமைக்கு வழுவாது திடபுத்தி யுடனிருப்பாயாக.

ஆ. ஆன்மசொரூப சமஸ்கார வடிவ சைதன்ய அனுபூத அனுபவ திடத்தால் தன்னைப்பெற்று அந்த திடத்திலேயே இருந்துகொண்டு கீழிறங்கா திருப்பாயாக.

## 85. பேசுவதிலையாம்

பா. தேவாலங்களுக்குச் சென்று ஆங்கு ஸ்தாபித்துள்ள விக்கிரக ரூப தேவர்கள் நமக்குப் பூரண பக்குவம் வரும்வரை நம்மோடு பேசுவதின்றென்றறியக் கடவீர்களாக.

ஆ. சர்வ காரணங்களும், தத்துவங்களும், உபசாந்தத் தினுபசமத்தால் அடங்கி ஆன்மாவினதியற்புத வடிவில் நின்றுகொண்டு இருக்கப்பட்ட பிரஹ்ம ஞானிகள் வேறாக வெளியினின்று பேசாததோடு ஆத்மாவாகிய நாம் பேசுவதில்லை யென்றுட் கொள்வார்களென்றறிக.

## 87. பையுளம் பாரேல்.

பா. கெட்ட மனதுடையவர்கள், காணுதொன்று கூறுபவர்கள், கருத்துமாறி நடப்போர், இன்னோர்களது இசைந்த பழக்கத்தை உளத்திலுங் கருதா திருப்பீர்களாக.

ஆ. ஞானேந்திரிய, கருமேந்திரிய, அந்தக்காரண சர்வ தத்துவ விஷப்பைகளோடு கூடிய மனமென்னுஞ் சர்ப்பத்தின் விரிந்த சங்கற்ப விகற்ப மென்னும் படத்தை ஞானஞ்சனமென்னும் அமிர்த மூலிகையின் வேரால் அதட்டி அப்படத்தை யடங்கச்செய்து அவ்வுள்ளத்தைத் தானாக்கி ஆங்கு நின்று பிரபஞ்சத்தைப் பார்க்கக் கடவாயாக.

## 88. பொய்யகமின்றேல்

பா. உலக விஷயங்களெதிலும் பொய்கூறு திருத்தல் மிகுந்த நலம் அதிலும் ஒருவருக்கும் கெடுதியுண்டாக்காத பொய்யொழித்து மற்றவைகளையாவது கூறி அங்ஙனே யிருப்பாயாக.

ஆ. எதார்த்த சைதன்ய ஆன்மாவின் கற்பித வடிவின் சூனிய தேஜோரூப ஜடப்பரிணாமமான மனது எக்காலத்து மெச்சமயத்து யாரிடத்தும் இல்லவேயில்லை யென்றுறுதி கொண்டு அதனதிஷ்டான வடிவை பிரஹ்ம சொரூபத்தில் கறைத்திருக்கக் கடவீர்களாக.

## 89. போதமும் பொய்யாம்

பா. எவ்வளவோ பெரிய உலகவிஷய ஞானம் பயின்றாலும் அதுவுமோர் க்ஷணநேரத்துள் மாறி மற்றொன்று தோன்றி விடுகின்றபடியால் அவ்விஷயாகார ஞானம் பொய்யென்றறியக் கடவாயாக.

ஆ. மூன்று முத்திரைகளினாரம்ப வடிவமாயும், யதார்த்த ஞானகார விருத்தியாயும், ஏகாக்கிரமாயும், சமாதி ரூபமாயும், இருக்கப்பட்ட யாதொரு ஞானமுண்டோ அதுவுமது முடிந்த காலத்தில் மித்தையென்றெண்ணக்கடவாயாக,

## 90. பௌதிகம் பாரேல்

பா. எடுத்த காரியத்தை முடிக்கவேண்டுமென்றாரம்பித்தவர்கள் பிராரத்த மெப்படியோ வென்றாலோசியாமல் பிரபலமுயற்சியை விடாதிருப்பாயாக.

ஆ. ஆதியாத்மீகம், ஆதி தெய்வீகம், ஆதி பௌதீகம், என்னும் தாபத்திரய துக்கங்களை ஞானானுபூதியினால் வென்று அவற்றை எப்போதும் பாராதிருப்பாயாக.

### 91. மலங்கெட வருவார்.

பா. சரீரத்திலுள்ள அழுக்குகள் நீங்க நீங்கச் சரீரம் பளபளப்பானவுடன் உள்ளிருக்கு மலத்தையுங்கெடுக்குமிச்சையான தேவனானவர் பிரசன்ன மாவாரென்றறிக.

ஆ. ஆணவமலம், மாயாமலம், கன்மமலம் என்னு மும்முறை மலமும், புருஷப் பிரயத்தனத்தால் நசிக்கச் செய்து சத்தினி பாதபரிபாக காலம் வந்தவுடன் ஞான வடிவை யறிவிக்க ஞானானந்த சொரூப ஆசாரியர் வருவா ரென்றயக் கடவீராக.

### 92. மாதவமறிவாய்.

பா. ஆசைவிலக்குவதற்காரம்ப வாதாரமான சாந்து ராயண கிருச்சிர ஏகாதசி சிவராத்திரி முதலிய அரிய தபங்களையும் ஈஸ்வர நாமோச்சாரணையையுமியற்றி தவத் தினுண்மையை யறிந்துகொள்வாயாக.

ஆ. அந்தக்கரண சம்பந்த சிதாபாசனையும் அவித்யா சம்பந்தஜீவனையும் மாயாசம்பந்த ஈஸ்வரனையும் அகற்றி நம்முடைய யதார்த்த சொரூபத்தையறிய அவாக்கொண்டு சமாதிநிஷ்டையிலும் மஹா தவத்தையியற்றி அது தானாக வாவாயாக.

### 93. மின்னிலை யுலகம்.

பா. உலக லௌகிக குடும்பநிலையில் மேலே சென்று மெதுவாக ஆங்கேயிருந்துகொள்வீர்களாக.

ஆ. மாயாகற்பித இச்சகத்துத் தோன்றி மறைந்து போகுஞ் சுபாவமாயிருக்குந் தன்மை வாய்ந்திருத்தலால் மேகத்தின் சம்பந்த மின்னிலையொத்து இவ்வுலகமிருக்கு மென்றறிவாயாக. அல்லது சமாதியப்பியாசத்திற்கு முன் சாக்ஷி தரிசனத்திற்குப் பின் தோன்றக்கூடிய ஓர்வித மின் போன்ற பிரகாசததை உலகமென்றெண்ணக்கடவாயாக.

94. மீமிசை மின்னும்

பா. பார்வைக்கு மிகவும் ரம்மியமாகத் தோற்றுகின்ற ஆடை, ஆபரணம், ரவிக்கை, முகம், மற்றுமுள்ள ஸ்திரீ களைக்கண்டு மயங்கி விடாதிருப்பாயாக.

ஆ. அகங்காரவடிவ ஜெகத்தையகற்றி அப்பால் ஞானுபிவாச முடிவில் பிராணசக்தி பிரமரந்திரத்தில் நிலைத்து அப்பியாசிக்கு முடிவில்விளங்கும் ஓர்விததேஜோ ரூபத்தை யதார்த்த வடிவ அத்தியாசமாக வெண்ணக்கட வாயாக.

95. முழுதற முதலார்.

பா. குடும்ப முதலே இருந்த நிலைமைக்குக் குறைத்து விடாததான தருமங்களியற்றி எப்போது முதலில் லௌகீ கரிடத்து மேன்மை பெற்றுருக்கக் கடவாயாக.

ஆ. ஆகாமிய சஞ்சித பிராரத்த வினைகளும் ஸ்தூல சூட்சும காரணசரீரங்களும், சாக்கிர சொப்பன சுழுத்தி அவஸ்தைகளும், பஞ்சகோசங்களும், எல்லாவிடங்களுங் கழிந்த பின்பு அப்பால் நின்றவிடம் ஜெகத்திற்கு முதல் வஸ்துவானபடியால் ஆங்கே சென்றிக்கக் கடவாயாக.

96. மூகர்களாவார்.

பா. நம்மிடத்தில் வருகிற யாரையும் நம்பாதுநின்ற நம்மைக்கண்டு பயந்து நிற்பாரிடம் ஒன்றுமறியாதவன் போலிருக்கக் கடவாயாக.

ஆ. சுத்தசைதன்ய வஸ்துவை யதார்த்தமாயுணர்ந்த விவேவிகள் ஜகத் மாந்தர்கள் தன்னிலைமை யறியாதவண் ணம் ஒன்றுமறியாத மூடர்களைப்போலத் தோற்றுவா ரென்றறிக.

97 மெலிதலு மெய்யார்.

பா. ஓர் மாதத்திலிரண்டு தடவைக்குமேல் மாதர்களைப் புணருவீர்களாயின் ஸ்தூல சரீரம் மெலிந்து எலும்பு வெளிக்காணுமாகையால் அவ்விஷயத்திலெல்லோரும் அதிஜாக்கிரதையாயிருக்கக் கடவீராக.

ஆ. சாந்தவடிவ சற்குரு நாட்டத்தின் பலத்தால் மனாதிகாரணங்களை மெலியச்செய்து நாசமாக்கி நின்றவிடமே சுசாதி விசாதி சுவகத பேதரகித அவாங்மனோவகோசர பிரஹ்ம வஸ்துவாகுமவ்விடத்தே நிலைத்திருப்பீர்களாக.

98. மேலற மேலோர்.

பா. யாரைக்கண்டாலும் நம்மைக்காட்டிலும் உயர்ந்த பெரிய நிலையுடையோரல்லவென்னு மகங்காரத்தைத் தொலைத்து எல்லாரிலும் தன்னைத் தாழ்ந்தவனாக நினைத்தல் வேண்டுமென்றறிவாயாக.

ஆ. வெளிக்குப் பெரிதாகவும் மேலாகவுந் தோன்றக்கூடிய மனதிற்கு மேலானமாயை அதன்மேலப்பாலுள்ள அறிவால் அறச்செய்து அம்மாயையின் மீதேறி நின்றுகொண்டு அப்பாலுள்ள இரகசிய நுட்பங்களை யுணருவீர்களாக.

99. மையிட மாறு.

பா. நல்ல சுபாவத்தையுடயோர்கள் கருத்த நிலங்களிலும் கருத்த மனமுடையவர் வசிக்கு மிடங்களிலும் கருத்தரிக்குங் காரணபீஜ வடிவ அன்னியமாதர்களிருக்குமிடங்களிலும் வசிக்காது மாறியிருக்கக் கடவீராக.

ஆ. சோம்பல்; மயக்கம், நித்திரை, பயம், மைதுனம் இவைகளின் வடிவ தமோகுண வடிவார்த்த பிரதான

அவித்தையினாரம்ப மனோகற்பித அவ்யக்தத்தின் லக்ஷண மாயையினின்று விஷயஞ்செய்த எவரும் அவர்களிடங்களுமாறு மௌனவறிக.

## 100. மோக்குளி னுறவேர்.

பா. திரிவிதகரணத்திலும் தெய்வங்களை வழிபடுந் தன்மை வாய்ந்தவர்களினுறவை யெப்போது நீங்காதிருப் பீராக.

ஆ. பஞ்சிகரண பஞ்சபூதவிகாரவடிவ அன்னமய கோசத்தினடு மத்தியிலுள்ள இருதயத்தி லிருக்கப்பட்ட சமுதாய நாடிகளினாரம்பத்தில் வாழைப்பூப்போல் கீழ்முகமாக ஓர் புஷ்பம் தொங்குகிறது அவ்வுள்ளே யிடமாகப் பொருந்தியிருக்கப்பட்ட ஜீவாத்மா அப்புஷ்பத்தை ரேசக பூரக, கும்பக, பிராணயாமத்தாலும், லம்பிகாயோகத்தாலும், மூலாதாரத்திலுள்ள குண்டலிசக்தியை யெழும்பச் செய்து அப்புஷ்பத்தில்மோதி மேல்முகமாக அப்புஷ்பங் கிளம்பஅலர்ந்து அருகிலுள்ள ஆன்மா அதினின்றுகிளம்பி மேல்நாடி சுழுமுனைவழியாகப் பிரமரந்திரஞ்சென்றுஅங்குள்ள அமிர்தகலசத்தை யுடைத்து அங்குநின்று அஃதொழுகி இப்புஷ்பத்திற்ருக்க உடல் குளிர்ந்து மணங்குளிர்ந்து பசி தோன்றாதிருக்குமவற்றின் சிநேகிதத்தை நீ வேண்டுவாயாக.

## 101. மோக்கமு முன்னேல்.

பா. அனித்திய விஷய சுகங்களையே நாடி அது மாறாதிருக்குமுறையை மனதினிலேந் திருப்பாயாக.

ஆ. சாதனசதுட்டய சம்பத்தியை அவதிவரைப் பெற்று தீவிரமோக்ஷ இச்சாபூர்ண ஆசார்ய அனுக்கிரக சமாதிலக்ஷண நிஷ்டையானந்த ஜீவன் முக்தியை யடைந்-

தவரெவரும் பின்பு முக்தியை யடையவேண்டு மென்னும் பிராந்தியை ஒழிக்கக் கடவாராக.

### 102. மௌனமு மாறும்.

பா. யாருடனுவது கோபங்கொண்டு இனிப்பேசுகிற தில்லையென்னும் விரதம்பூண்டால் பேசுகிறகாலம் வருமாகையால் முதலிலேயே அவ்விரதம் பூணுதிருப்பாயாக.

ஆ. வாக்குமவுனம், காணமவுனம், காட்டமவுனம், மஹாமவுனம், என்னுமவுனநிலைகளு மாறுமாகையால் அவற்றையுந் தாண்டிய விடத்திலிருப்பாயாக.

### 103. வந்திடுந் தடைகள்.

பா. ஏதாவது சுபகாரியங்கள் செய்யப்புகுவோமானல் இடையிலளவிறந்த தடைகளுண்டாகுமாதலால் அவற்றின் மயங்காதிருப்பாயாக.

ஆ. பஞ்சகோசங்களையுஞ் சூனியத்தையுந் தாண்டியப்பாற் சென்று ஆன்மாகார விருத்திரூப சமாதி அப்பியாசிக்கு மளவில் லயம், விக்ஷேபம், கஷாயம், ரஜாஸ்வாதமென்னுந் தடைகளும், அஞ்ஞானம், சந்தேகம், விபரீதம் பூதம், பவிஷ்யம், வர்த்தமானம், முதலிய பிரபந்தங்களும் வந்துபொருந்துமென்றறிவாயாக.

### 104. வாதனை வசத்துறேல்.

பா. மனத்திற்குத்துன்பம் தோற்றுகிற எவ்வித காரியங்களின் வசத்திலும் நில்லாதிருப்பீர்களாக.

ஆ. எண்பத்துநான்குலக்ஷயோனி ஜாதிகளில் அநேகதாஞ் சனித்து நின்ற பழக்க வாசனையினுல் பற்றப் பற்றச் சுத்தா சுத்த வாசனைகள் வரும். அவற்றின் வசப்பட்டு தன்னை மறந்து அதின்வழி பொருந்தாதிருப்பாயாக.

105. விந்துற விமலம்.

பா. அன்னத்தின் பரிபாக இரத்தம் பெருக அவற்றி னதிஷ்டானவடிவ இந்திரியத்தின் சேர்க்கையினுல் காய சித்தி உண்டாக மனது எப்போதும் பரிசுத்த நிலையை யடையுமென்றறிவாயாக.

ஆ. பிரமநாதத்துக்குக்கீழான விந்துவின் சொரூபத் தையடையப் பரிசுத்த பிரஹ்மசைதன்ய நிலைமை வந்து விடுமென்றறிவாயாக.

106. வீணற வித்தோர்.

பா. ஜகத்மாயையின் வடிவ அன்னிய மாதர்களைக் கண்டால் கலங்குகின்ற மனோஇந்திரியத்தையடக்கி வித்து வின் தன்மைபெற்ற சுழுமுனைநாடியிலமர்ந்திருப்பாயாக.

ஆ. பயனற்ற செய்கைகளில் மனஞ்செல்லாதுநின்ற அவசரத்திலுண்டாகும் மாயை யென்னுமோர் சக்தி ஆன் மாகார விருத்தி ஞானத்தால் நசித்துப்போக அவற்றிற்கும் பீஜமாயிருந்த நித்தியவடிவ பரவஸ்துவிலேறி யங்ஙனே யிருப்பீராக.

107. உன்னிட முன்னில்.

பா. உன்னுடைய நிலமுதலிய இடங்களையே உன்னி அதினிடத்தே யன்பு செலுத்தி அதையுழுது பயிர்செய்து அதிலுண்டாகும் பலனைக்கொண்டு நீ ஜீவித்துவருவாயாக

ஆ. மாயையின் கற்பித ஜீவாத்ம சொரூபத்தைத் தானே யறிந்தவுன்னில் வேற்றிடங்கண்டு தன்னிலே தன் னைக்காண்பாயாக.

108 ஊழியுந் தூர்ப்பாய்.

பா. நான்குயுகவூழி, பிரமவூழி மற்றுமுள்ள எவ்வித ஊழிகளையும் மந்திர மணி ஒளஷத காயசித்தியாற் ஜெயித் திருப்பாயாக.

ஆ. மூவகைச் சரீரத்தைநம்பி அதேநாமென்று நாமே நிச்சயித்த இத்தூலங்கள் ஓர்காலத்தழியுமென்பதால் ஆழியின் உச்சியான பரமவஸ்துவினுண்மை நிலையைப்பற்றி அங்ஙனே யேறியிருப்பாயாக.

## 109. வெண்குண மீறும்.

பா. வெள்ளைநிற வஸ்திரம், வெள்ளைநிற ஆகாரம், வெள்ளைநிற நடை, பேச்சு, முதலியன கிருஹஸ்தர்கள் செய்வார்களாக.

ஆ. அவ்யாகிருதகற்பித முக்குணங்களின் உத்தமமானதும் இன்பமானதும் சுத்தமானதுமான சாத்துவிக குணமே பிரஹ்மஞானமடைந்த ஜீவன் முக்தரிடத்திலும் சேடித்து நிற்குமென்றறியக் கடவீர்களாக.

## 110. வேதகமறிதாம்.

பா. நவலோகங்களையும் குருமூலிகைவலியாற் சுருக்கிட்டுச் சுத்திசெய்து முப்பூமுடிவால் ரசவாதஞ்செய்து அவற்றால் காயசித்தி முதலிய சுபகாரியங்களை இயற்றல் மிகவருமையா மென்றறிவாயாக.

ஆ. சரீரம், இந்திரியம், பிராணன், மனது இவைகளிலுள்ள அழுக்குகளை கருமானுஷ்டானபக்தி இவைகளாற் சுத்திசெய்து ஜீவனை ஞான மூலிகையால் சுத்தஞ்செய்து, தானே தானுயிருப்பது மிகவரிதென்றறிவாயாக.

## 111. வையக மாற்றோர்.

பா. உலகத்தில் யாரிடத்திற் சென்றாலும் ஏமாற்றான குணங்களாகவே இருக்கிறபடியால் அவரிடம் கட்டுண்டு மாறிவிடாதிருப்பாயாக.

ஆ. தாபத்திரய துக்கம் தீரும்பொருட்டு எதார்த்த ஞானத்தையடைய இச்சைகொண்டனுஷ்டிக்கும் முழு

க்ஷுக்களுக்கு விரோதமாக வருவது உலகத்துள்ள ஏடணாத்திரயங்களாதலால் அவைகள் உலகமாதலால் அவ்வுலகம் ஞானத்திற்கு மாறென்றறிவாயாக.

### 112. ஒன்பான் றடைகள்.

பா. கிரகஸ்தர்களிடம் திரவியமிருக்குமானல் அது கெடுவதற்கு ஒன்பதுவிதத் தடைகளுண்டாகிறது. அவை யாவது, ஸ்திரீ இச்சை மிகுதி, மதுபானம், துஷ்டர் சேர்க்கை, அடுத்தோர் கேடு, வேட்டைக்குப் போதல், நிலைமை மறத்தல், நல்லோர் தீமை, டம்ப நினைப்பு, சாந்தமின்மைஇவைகளுண்டாகும் கண்டு விலக்கியிருப்பீர்களாக.

ஆ. சர்வதத்துவ நியதிசெய்து அவற்றையுந்தாண்டி ஆங்கு சமாதி அப்பியாசிக்கும்போது 1. அனுசந்தானம் மறந்துபோதல். 2. சோம்பலுண்டாதல். 3. இச்சை யுண்டாதல். 4. நித்திரைவருதல். 5. அந்தகாரந் தெரிதல். 6. விட்சேப முண்டாதல். 7. பிரகாசந் தோற்றுதல். 8. வேர்வையுண்டாதல் 9. சூனிய புத்தியுண்டாதல். இவ்வொன்பது தடைகளுண்டாகும். அவற்றைக்கண்டு நீக்கியிருப்பீராக.

### 113. ஒவுதலுண்மை.

பா. பெண்டு பிள்ளைகள் செல்வ முதலியன நீங்குங் காலத்தில் அதைக் குறித்து வருந்தினல் யாதொரு பலனுமின்றியபடியால் வருந்தாதிருப்பீர்களாக.

ஆ. இந்திரியநிலை, மனோநிலை, ஜீவநிலை, முதலியன நாசமடையுமாதலால் அவற்றைநம்பி மோசம்போகவேண்டாம். ஏனெனில், சுழுத்தியிலும், பிரளயத்திலும், சங்கார காலத்திலும், ஞானதசையிலும், இவ்வுலகமும் மனதும் அஞ்ஞானமும் அழிந்துபோகுமாகையால் அதில் மயங்காதிருப்பாயாக.

## 114 வெளவுதல் வைரம்.

பா. அன்னியர்கள் பதார்த்தங்களை அறிந்தோ அறி ந்தோ அறியாமலோ கிரகித்தாயானால் அவருக்கு மனதில் வைரமுண்டாகும். அதனால் இப்போதோ மற்றெப்போ தோ தீமை விளையுமென் றறிவாயாக.

ஆ. சமதமாதி சாதனங்களைப்பற்றி மோக்ஷ இச்சை யால் உலக வைராக்கியங்கொண்டு ஞானனந்த வடிவ குரு வுபதேசம் பெற்று அதனல் ஆன்ம சொரூபமாகிய தன் னைத்தானே உணர்ந்துகொண்டு அவற்றையே பற்றி நின்று அதன்னியமாகத் தோற்றப்பட்ட பிரபஞ்ச மெல்லாவற் றையுந்தானன வைராக்கியத்தாற்பார்த்திருப்பதெனவறிக.

## 115. சித்துரு வரமுள்.

பா. உலகோரெல்லாங் கொண்டாடுகிற விக்கிரக தேவதைகளை உருவாரச் சிலைகளென்றெண்ணாது யதார்த்த வடிவ ஈஸ்வரப் பிரதிமைகளென்றே கருதக்கடவாயாக.

ஆ. தற்போது ஜீவ வடிவமாகத் தோற்றப்பட்ட நாம் நம்மை நமக்குச் சித்து ஞானமென்னு மண்ணின லாக்கப்பட்ட பதுமையைப் பிரபஞ்ச சங்கிலியுடன் கோர்த்து நம்முடைய கழுத்திலணிந்தபின் ஆங்குசென்று நினைந்திருப்பாயாக.

## ஸ்ரீமிரக நில்லா.

பா. எந்த விஷயத்திலும் நமது மனம் உற்சாகப்படு மானல் அவ் வுற்சாகம் அப்படியே கடைசிவரை நிற்கமாட் டாதென்றறிவாயாக.

ஆ. சத்துவ குணப் பிரதான வடிவமனது ரஜோ குண தமோகுண சம்பந்தமாய் மயங்கி வாதனை வசம டைந்து நின்றால் உண்மை ஞானமார்க்கத்தி லொழுங்காக நிற்கமாட்டாதெனவறிக.

117. கேந்தகஞ் செய்வாய்.

பா. ரசாயன முறைப்படி கெந்தக சுத்தி செய்து அதனைக் கிண்ணமாக்கி அதிற் பால் ஜலம் மற்று முண்டு வருவாயாக.

ஆ. ஞானேந்திரிய கருமேந்திரிய அந்தக்கரண பிராணபஞ்சக கால தத்வ முதலிய ஓடும் சரக்குகளை ஒழுங்கானகடையில்வாங்கித் தத்துவாத மூலிகையால்ஓடா மற றடுத்து அவற்றை ரசாயனஞ் செய்து சவிகற்ப நிருவி கற்பவோடு மூடி சம்பிரக்ஞாத சமாதி யென்ற சீலை மண் செய்து ஞானுக்கினி யென்னும் புடமிட்டு சகஸ நிஷ்டை யென்னும் பஸ்பத்தை யெடுத்து ஜன்ம வியாதியுடைய மனுஷ்யர்களுக்கு அதீத மென்னுந் தேனிற் குழைத்து அன்பெனு நாவில் தடவி இன் பென்னுந தொண்டை வழி யாய் இருமாப்பென்னும் முதாரத்திற் சென்று இரக்கமென் னுஞ் சக்தியால் மேற் கூறிய வியாதியை நாசமாக்கும். அழிந்த கெந்தகப் பஸ்பத்தை அழியாம லாக்குவீராக.

118. இரண்டறு மோன்றோர்.

பா. யாரிடத்திலும் பேசினல் எவ்விஷயத்தை எப்ப டிப் பேசுகிறோமோ அப்படியே இரண்டு படாம லிருந்து கொள்ளுவாயாக.

ஆ. அத்வைத சொரூபத்தினின்று சங்கற்பித்த துவைத புத்தியானது மறுபடியும் அத்துவைதம் நசிக்கு மாறு செய்யப்பட்ட லோகாதீத புத்தியினல் ஒன்ருக்கி அவற்றை ஏற்கக் கடவாயாக.

119. ஊனமின் ஞானமோர்.

பா. மாறிப் போகாததாயும் கெட்டுப் போகாததாயு முள்ள உலக விஷயங்கள் செய்து அதிலே கண்ணு யிருப் பீராக.

ஆ. சர்வ தத்துவங்களையுந் தாண்டிய விடத்துப் பிரம்மானு சந்தானஞ் செய்து கொண்டிருக்கும் போது அவற்றின் தடையான நான்கு ஒன்பதுவித வகைகளையும் நீக்கிக் கெடுதியின்றிய திடாபரோக்ஷ ஞானத்தை ஏற்கக் கடவாயாக.

120. உற்றிட நழுவேல்.

பா. முன்னோர்களால் உனக்குப் பொருத்திவைக்கப் பட்ட இடத்தினினறு எக்காரணங்கொண்டும் விலகாதிருப்பாயாக.

ஆ. பூர்வ ஜன்மாந்திர நிஷ்காம கர்ம புண்ணிய பலமேலிட்டால் உபாசனை, தியானம் முதலிய சாதனங்களாற் சித்த சுத்தி வந்து அதன் பாகத்தாற் சற்குரு கிடைத்து உபதேச வாயிலாக ஞானனுஷ்டானஞ் செய்து ஆன்ம தரிசனமாக்கி அடிக்கடி சமாதி பழகி நின்று கொண்ட அவ்விடத்தினின்று ஒருக்காலும் நழுவாதிருப்பாயாக.

121. ஞேயமுந் தள்ளுவார்.

பா. முன் ஜென்ம புண்ணிய பலமின்றியவர்க்கு எவ்வளவு ஆத்மஞான விஷயங்களைக் கூறினும் அவர்களது துர்க்குணமே முன் வந்து சொன்னவைகளைத்தும் தள்ளிவிடுவாரென்றிச.

ஆ. ஜாக்கிர சொப்பன சுழுத்தி என்னு மூன்றவஸ்துகளையுந் தாண்டிய விடத்தில் மனதை நிறுத்தி அப்பியாசிக்கு முடிவிலுண்டாகுந் திருபுடியுந் தாண்டிய ஞானிகள் ஜீவன் முக்தி நிலையைப் பெற்றுப் பிராப்த முடிவில் அதுவுந் துக்கமென்றுகண்டு ஞேய சொரூபமானதையுந் தள்ளி விதேக முக்தி நிலையைப் பெருவாரென்று கொள்ளக் கடவாயாக.

### 122. ஞையது ஞயமாம்.

பா. யாரிடத்திலும் நயமாகப் பேசிவரின் நயத்தையே தருமென்றறிவாயாக.

ஆ. மைத்திரி கருணை முதிதை உபேக்ஷை முதலிய நான்கில் மைத்திரியால் ஆன்ம சினேகிதத்தைக் கொண்டு ஆன்ம வடிவ ஞயமே ஜென்மத்தை நிவிர்த்திக்கு மிக்க நன்மையென்றறியக்கடவாயாக.

### 123. ஜாலமே உலகம்.

பா. யாரிடம் பேசினாலும் உள் வஞ்சகமான ஜால மனதுடனிருப்பதால் உலகம் பூராவும் ஜாலமயமாயிருக்கின்றதென்றறிக.

ஆ. யதார்த்த ஆத்ம ஞான வடிவ பிரஹ்ம சொரூபத்தில் ரஜ்ஜு சற்பம் போலவும், கிளிஞ்சில் வெள்ளி போலவும், இவ்வுலகம் இந்திரஜாலமாகத் தோன்றுமென்றறிக.

### 124. ஓய்தலு முணர்வார்.

பா. நம்மிடத்து உலக போக சாதனங்கள் குறைவற இருக்கும்போது நித்தியம் வருகிற சிநேகிதர்களெல்லாம் அப்போக சாதனம் ஓய்ந்த காலத்து ஒருவருந் திரும்பிப் பாரார்களாகையால் அவ் விஷயத்தி லுள்ளுணர்வோடிருப்பாயாக.

ஆ. முக்குணமும், மூன்றவஸ்தையும், மூவுலகிச்சையும் ஆத்மானு சந்தான பலத்தால் ஓயச்செய்து நின்ற முடிவே ஞானமாகையால் ஆங்கு நிற்கக் கடவாயாக.

### 125. ஆலயமாவாய்.

பா. எல்லோரும் சித்த நின் மல மடைவதற்குச் சாதனமான தேவாலயங்கட்குச் சென்று ஆங்குள்ள திவ்ய மங்கல விக்கிரகத்தின் சொரூபமாயாவீராக.

ஆ. ஜீவான்மாவின் லயரூபவடிவ பரமான்மாவின் யதார்த்த நிலையைச் சங்கற்ப நாசஞ் செய்து சைதன்னிய வடிவமாக இருக்கக் கடவாயாக.

126. மாலற நிற்பார்.

பா. யாவரும் மனதிற்கு மயக்கையும் சரீரத்திற்குக் குறைந்த நோயையும் விளைவிக்கும் லாகிரி பதார்த்தங்களை உபயோகிக்காது நிற்கக் கடவாராக.

ஆ. அதிஷ்டான வடிவ அந்தணனந்த அப்பியாச மனோபாவத்தால் மாயா மயக்க நீங்கப் பெற்றுத் தன்னிடத்திலேயே தாங்கள் நின்று துவைத பாவனை நீக்கி யிருப்பாரெனவறிக.

127. தானுறல் சகசம்.

பா. லௌகீக வைதிக எக்காரியங்களிலும் தானே தன்னுடைய காரியங்கட்கு நேரே பார்த்துச் செய்வதே மிகுந்த சகச வடிவ நன்மையென் றறிவாயாக.

ஆ. அன்பின் வடிவ ஆரோபித ஜகத்தின் அதிஷ்டான வஸ்துவின் அந்தரங்க நிலையை யுணர்ந்து தானாக நின்ற ஞானிகளுக்கு நிஷ்டை பழக வேண்டாமா மென்றறிக.

128. மாந்துதன் மாவில்.

பா. தனக்காகக் கிடைத்த ஏதேது பதார்த்தங்கள் பூரூவும் தானே அனுபவித்துவிடாமல் தனது சகோதரர்களுக்கும் பாகித்தீந்து அதை அனுபவிப்பானாக.

ஆ. தன்னுடைய யதார்த்த சொரூபத்தில் நின்று நழுவாமல் அங்கிருந்துண்டாகும் ஆத்மானந்தத்தை வேறாக நினையாது தானாக வெண்ணித் தானாயிருப்பாயாக.

129. மாதர்கள் மாதாம்.

பா. உலகத்திற் றோற்றும் எவ்வகை ஸ்திரீகளைக்கண்டாலும் யாவரும் தாயாக நினைத்திருக்கக் கடவீராக.

ஆ. ஜகத்தின் தமோகுண வடிவ ஸ்திரீகளுக்கு அதிஷ்டானவடிவ மாயையின் சக்தியானது மோக்ஷமடைவதற்குள்ள அப்பியாசிகளுக்கு மிகுந்த ஹிதத்தையூட்டி ஞானங்காண்பிவித்தலால் மாயையென்ற ஸ்திரீயை மாதாவாக அறியக் கடவீராக.

130. பிடரியுட் பேறும்.

பா. இந்திரியத்தைக் கட்டினுல் பிடரிவழிமேல் ஏறவேண்டியிருப்பதால் அதனுள் லாபத்தைக் கருதியிருப்பீராக.

ஆ. சோடசகலாமார்க்கத்தால் பிராணவடிவ மனதைச் சுழுமுனையிற் சேர்த்து லம்பிகா யோகத்தால் பிடரிமார்க்கத்துட் சென்று அவ்வழியாகச் செல்வாயாகில் பெரிய ஆத்ம லாபங் கிடைக்குமென்றறிவாயாக.

131. சமாதியுஞ் சாரேல்.

பா. மனிதர்கள் இறந்துபோனுல் பூமியிற் புதைத்துப்பெரிய கட்டடங்கள் கட்டிப் பூஜை முதலிய செய்வித்து அதற்கும் சமாதியென்றொரு பெயரிடுகிறூர்கள். அவற்றைச் சார்ந்திருக்கும் புத்தியை விட்டுவிடுவீராக.

ஆ. சப்தசமாதி சப்தங்கடந்த சமாதி, பாவனுசமாதி அபாவனுசமாதி, விகற்பசமாதி, நிருவிகற்பசமாதி, ஞாபக சமாதி, அஞ்ஞாபக சமாதி, வித்துசமாதி, வித்தற்றசமாதி முதலிய சமாதிகளை அப்பியாசித்தடைந்து பின் சகல நிஷ்டையைச் சார்ந்த பிற்பாடு ஒருவகைச் சமாதியுஞ் செய்யாதிருப்பாயாக.

132. வேதமுங் கொள்ளேல்

பா. ஆத்மஞானத்தையடைந்த ஞானிகள் தவிர மற்ற யாவரும் ஆகமமார்த்தை அனுஷ்டித்து அதன்வழி நடக்க வேண்டும் வேதவழியைக் கொள்ளாதிருப்பார்களாக.

ஆ ஆதியிலிருந்த அறிவுவடிவ பரமான்மாவின் கற்பிதமாயை அம்மாயையின் கற்பித முக்குணம். அம்முக்குண கற்பிதம் ஈஸ்வரன், ஈஸ்வரகற்பிதம், வேதாந்தம், வேதாந்த கற்பிதம், வேதம், ஆதலால் இவ்வேதம் அனந்த கற்பித வடிவமாக இருத்தலால் ஞானமடைய இச்சைகொண்டு சமாதி பயிலும் எவரும் அவ்வேத நீதியைக் கொள்ளாதிருப்பாயாக.

133. வேற்றுருவாகேல்.

பா. யாவரும் அவரவருடைய அந்தஸ்து, தேசம், காலம், ஆசாரம், ஜாதி, குலம், வீடு, இவைகளுக்கு மாறி வேருகாதிருப்பாராக.

ஆ நாம் பதார்த்தவடிவ ஆன்மசொரூபமாக இருந்தும் ஜீவேஸ்வர ஜடப்பிரபஞ்சங்களாக நம்மை நாம்நினைக்கிறோம். ஆகையால் நம்மை நாமுணர்ந்து வேற்றுமையான பதார்த்தங்களையெல்லாம் விட்டொழித்து ஆன்மானனியமின்றி யிருக்கக்கடவாயாக.

134 எண்ணறுமெண்ணேர்.

பா. குடும்ப காரியங்களில் துக்கமில்லாத விஷயங்களையே யெண்ணி அதன்வழி வழியே நினைத்திருப்பீராக.

ஆ. அவித்யா கற்பித சங்கற்ப விகற்ப சூனியவடிவ ஜடரூப மனதை ஆன்மநாட்ட அங்குசத்தாலறுத்து அப்பால் நின்றுகொண்டு ஒன்றையும் எண்ணுதிருக்கக் கடவீராக.

## 135. ஏசுவை யேசேல்.

பா. ஏகநிலையைப் பெற்ற ஏசுகிருஸ்து நாதரை எம் மதஸ்தரும் இகழ்ந்து அவரும் சாதாரண மனுஷ்யனென்று பேசி நிந்தை செய்யா திருப்பாராக.

ஆ. ஞான நிலை யடைந்து கொண்ட நாம் நம்மை எவ்விதமாகவாகிலும் மனிதர்கள் தேவர்கள் மிருகங்கள் பக்ஷிகள் இவர்களில் யாராகிலும் நிந்தை செய்வர்களானுல் அவர்களோ டெதிர்த்து நீயும் நிந்தை செய்யா திருப்பா யாக.

## 136. முகம்மது முன்னபி.

பா. இஸ்லாம் மதத்தின் பெரிய அஜாத்து வடிவ முஹம்மது நபீர் முதலான மஹான்களை முதன் பெற்ற கடவுள் வடிவ தூதர்களென்று கருதியிருப்பாராக.

ஆ. ஸ்தூலசரீரத்தின் உயர்ந்த இடமான முகத்தின் மீதுள்ள பிரமரந்திரத்தில் பைரவி முத்திரையை அப்பியா சித்து அதன் பலத்தால் அங்குள்ள அமிர்தகலசமுடைந்து மதுவொழுகும். அம் மதுவை அறிவானந்த நாவால் உண்டு அங்கப்பாலிருப்பாயாக.

## 137. உள்ளொளி யுள்ளேல்.

பா. இரு கண் சிமிட்டாமல் சுழு முனை நாட்டம் நாத முடிவு பித்தத்தின் மீறிய மயக்கம் மூளை கலங்கல் இவைகளில் பொறி பொறியாக உள்ளே கண்ணுக்குப் பிர காசந்தெரியும். அவற்றிற்கிடங்கொடா திருப்பாயாக.

ஆ. குருவின் பிரசாதத்தாற் சமாதி பழகும்போது கடைசியாக ஓர் அனித்திய ஜட கற்பித கோடிசூரியப் பிர காசந் தோன்றும். அவ்வொளியை நிசமென்று ஆங்கே நின்றுவிடா திருப்பீராக.

## 138. மாற்றமுந் தோற்றம்.

பா. எங்கு சென்றாலும் யாரிடம் பேசினாலும் விசாரித்து நிதானித்து மெதுவாக ஆழ்ந்து சென்று பேசுவோமானால் அதனதன் விஷய மாறுதலெல்லாம் மனதிற்குத் தோற்றுமென் றறிவாயாக.

ஆ பின்னும் ஆத்ம நிஷ்டையைப் பழகி வரும் போது கடைசியாகப் பிரமானந்தம்போலத் தோற்றி மயங்கச்செய்யும். ரஜாஸ்வாதமென்னும் மாயா சக்தி வேறாக வந்து சம்பந்திக்கும். அவற்றில் மாறி மயங்கி விடாதிருப்பீராக.

## 139. ஆங்கிருந் தாட்டுவீர்.

பா. உலக விஷயத்தில் தேர்ந்த பண்டிதர்களாக வேண்டுமானால் அவரவர்கள் இருந்த இடத்திலேயே அநேக சௌகரியங்களுடனிருந்துகொண்டு எல்லோரையும் அடக்கி ஆட்டி ஆண்டு வருவீர்களாக.

ஆ. பஞ்சகோச, விலக்ஷண, சூனிய, அபவாத, சுதந்தர, மனோலய, லயவிக்ஷேப, கஷாய, ரஜாஸ்வாத, பிரம்மானுசந்தான அனுபவ, ஆரூட முதலிய இடங்களும் தாண்டிய அவ்விடத்திலமர்ந்த மாயா விகாரத்தையுந் தள்ளி அண்ட முடிவான வியாபக அவ்விடத்தி லிருந்துகொண்டு அதன் கீழ்ப்பட்ட அஞ்ஞான மனாதி இந்திரிய தத்துவ சகல ஜடப் பிரபஞ்சங்களையும் சாக்ஷியாக நாம் அதைப் பார்த்து அசைந்துகொண்டிருப்போமாக.

## 140. ஒன்றிலுங் கூடிடார்.

பா. குடும்ப நிலை தாளாது ஒழுங்காக இருக்க வேண்டுமவாவுடைய நன்மையுடையவர்கள் உலக டம்ப மனுஷ்யர்கள் செய்யும் எவ்வித ஒரு விஷயத்திலும் கூடி அப்படி நடக்கமாட்டார்கள்.

ஆ. அபார மாயா சக்தியுடன்கூடிய அவ்வுபய ரகித வஸ்துவில் நின்று நிலைத்த ஞானிகள் அதைத்தவிர அதன்னிய எவ்வித வஸ்துக்களிலும் கூடமாட்டார்களென்பதாம்.

## 141. எட்டினு லெட்டார்.

பா. பார்ப்பதற்கு பயந்ததுபோற் றோற்றுகிறஸ்திரீகளையும், உதடு கருத்த புருஷர்களையும், கருத்தபல், முகம் தெருண்ட மனமின்றிய முகப்பார்வை யுடையவர்களையும் கண்டுபிடித்து அவர்கள் மனது இவ்வளவென்று எட்டியறிய முடியாததால் அவர்களை நம்பி எட்ட நினையாதிருப்பீர்களாக.

ஆ. இயம நியம ஆசன பிராணாயாம பிரத்யாகார தாரண தியான சமாதிவடிவ அஷ்டாங்க யோகத்தால் அறிவு சொரூப அமலன் எட்டார். அல்லது துரியாதீத பூமியில் நிலைத்த ஞானிகளை அந்த ஞானிகள் தவிர மற்றை அஞ்ஞானிகள் யாவரும் எக்காரணங்கொண்டும் எட்டியறிய மாட்டார்களென்றறிக.

## 142. யோகமுன் ஞானமுள்.

பா. உலகபோகம் வேண்டுமென்று இச்சித்து அதில் மனதை நாட்டி அப்படியே அனுஷ்டித்துவந்தால் அதற்கு வேண்டிய யோககாலங் கைகூடிவருமுன் மேற்கூறிய போக சாதன ஞானங் கிடைக்குமென் றறிவாயாக.

ஆ. சுத்தப்பிரம ஞான சாக்ஷாத்காரத்தை அடைவதற்கு முன் லம்பிகாயோகம், சிவயோகம், ஹடயோகம், ராஜயோகம், கேசரியோகம், பைரவியோகம், சாம்பவியோகம், நவகண்டயோக முதலிய யோகங்களைப்பழகி அதனப்பால் முன்சொன்ன ஞானத்தை அப்பியாசிக்கக் கடவீராக.

143. நாற்குண நாட்டுவீர்.

பா. எல்லோரும் தமது பெண் குழந்தைகளுக்குப் பால்ய காலத்திலிருந்தே அன்னிய புருஷர்களைக்கண்டால் வெட்கம், ஒன்றுந் தெரியாம விருத்தல், எல்லா விஷயங் களுக்கும் பயப்படுதல், மாதா, பிதா, புருஷன் முதலியவர் களுக்கு மீறுதிருக்கும்படி பழகி வைத்தல். இன்னால் வகை அரிய குணங்களை நாட்டி வைப்பீர்களாக.

ஆ. முக்குணத்தையும் அவற்றைத்தாண்டிய குணத் தையும் முக்குண வொன்பது குணத்தையும் ஆத்மநாட்டத் தால் மாற்றித் தன்னிடத்தில் இருக்கக்கடவீராக

144 கிட்டினலோடேல்.

பா. நாய், பேய், பைசாசம் இவைகளும் காமமுடைய மாதர்களும் கிட்டே வந்தால் பயந்து ஓடிவிடாமற்றிடமாக எதிர் நின்று வாதாடி அவரை யோட்டி விடுவீராக.

ஆ. நிஷ்டாப்பியாச காலத்தில் மாயையானது கானு வித பிரதிபந்தங்களாக வந்து பொருந்தும். அவற்றைக் கண்டு பயந்து ஓடாது நின்று அவற்றையெல்லாஞ் ஜெயஞ் செய்வீராக.

145. கற்றவர் கண்டிலார்.

பா. வேதம் ஆகமம் ஸ்மிருதி புராணம் இதிகாசம் முதலியவைகளைக் குருட்டுப்பாடமாகவும் காயத்திரி அஷ் டாக்ஷரம் பஞ்சாக்ஷரம் பிரணவம் முதலிய மந்திரங்களை யுங் கற்றவர்கள் அதுதனுள் விஷயத்தைக்காண மாட்டார்க ளெனவறிக.

ஆ சர்வ மத தத்துவவிஷயங்கள், இன்னும் தனது அனுத்ம தத்துவங்கள். இவைகளைக் கற்றுத் தேர்ந்தவர் கள் தனது யதார்த்த நிலையைத் தெரிந்து காணமாட்டா ரெனவறிக.

146. ஒட்டிவ தொட்டேல்.

பா. சரீரம் ஆகாரம் பேச்சு இவைகளுட னொட்டி வரப்பட்ட கெட்ட விஷய இச்சைகளில் நீ ஒட்டாதிருப்பாயாக.

ஆ. ஞானாரம்ப கால முதல் முடியும் வரை வந்து பொருந்தப்பட்ட எவ்விதச் செயல்களானாலும் அவற்றை நம்பி ஒட்டாமல் உன்னிடத் திருப்பாயாக.

147. புண்ணியம் பெறுவீர்.

பா. புத்திரன் தனம் வீடு சரீர சௌக்கியம் இவைகள் க்ஷேமமும் உண்டாகவும் வேண்டு மென்று மிகுந்த புண்ணியச் செயல்கள் புரிவீராக.

ஆ. சுபாவமான அறிவுடன் தன்னிலையினின்று மாறுது பற்றற்று யதார்த்தமான திரிவித காரணங்களும் காணுத ஆத்மாவாகி அகர்த்த பாவனையால் அவற்றைச் செய்யாதிருப்பாயாக.

148. ஞோள்கலு மின்றேர்.

பா. நாள்தோறும் நவக்கிரகங்களுக்குச் சகாயமான பிராயச்சித்தங்கள் செய்து வந்தால் அவர்களது கிருபையால் ஸ்தூலத்திற்கு யாதொரு இடையூறு மின்றென் றறிவீராக.

ஆ. ஆன்ம வடிவமானது அகங்கார தத்துவத்தைப் பெற்று அன்னிய மானபடியால் அதை அதுவே அன்னியமாக நினைத்துச் சுக துக்கத்தில் மாறி ஆழ்ந்து பிறக்கின்றன. ஆதலால், அவற்றை அறிவால் விசாரணை செய்து அவ் விஷய மபக்கத்தை யில்லாம லாக்கி விடுவீராக.

149. நேதிசெய் நிலமோர்.

பா. மேட்டுப் பூமி, மிகுந்த தாழ்வுற்ற பூமி உவர்ப் பூமி இவைகளின்றிய நிலங்களை வாங்கி அதை ஏற்றுக் கொள்வீராக.

ஆ. இது நானல்ல இதுவல்லவென்று எல்லாங் கடந்துநின்ற துரிய நிலத்தை என்னுளும் கண்டு ஏறியிருப்பிபாயாக.

150. அறவறவறவுள்.

பா. தனது செல்வம் பூமி மனை முதலிய மற்றுள்ளவெல்லாம் அற்றுப் போக அதற்குள்ளபடி மனம் நினைத்துச் சமாதான மடையு மென் றறிவாயாக.

ஆ. மாயா தத்துவம் தாண்ட மகதத்துவம் வரும்.
அது கடக்க அறிவின் தத்துவந் தோன்றும்.
அதை அறுக்கப் பிரகிருதி தத்துவம் வரும்.
அதைத் தாண்ட ஆகாச தத்துவம் வெளி வரும்.
அதுவுந் தாண்ட அம்பர வுணர்வு தோன்றும்.
அது தள்ளிச் செல்ல அகண்ட வெளியாகும்.
அதைக் கடக்க அத்தகைய இடமே அதிகமாகத் தோற்றும்.
அது தள்ள அந்தகாரந் தெரியும்.
அதுவு முற்ற ஓர் பிரகாசந் தெரியும்.
அதுவு மகற்ற அகங்கார தத்துவம் வரும்.
அதுவு நழுவ அளவற்ற ஜோதி தோன்றும்.
அதுவு மகல அறிவுண்டாகும்.
அதுவும் போக ஓர் மயக்க முண்டாகும்.
அம் மயக்க நீங்க மாயை யுண்டாகும்.
மாயை நீங்கத்வைதபாவனை தோற்றும்.
அது மறைய த்வைதாத்வைத வர்ஜிதம் தோற்றும்.
அதை யொழிக்க ஆகாச போதம் வரும்.
அதை நீக்க அகண்ட வுணர்வு தோன்றும்.
அதையுங் கடக்க ஓர் பெரிய இன்பந் தோற்றும்.
அதைத் தாண்ட பெரிய துன்பந் தோற்றும்.
அதுவுங் கடக்க துன்ப இன்ப ரகித நிலை வரும்.

அப்பாற் செல்ல ஆன்ம வுணர்வு சிறுக வரும்.
அதற்கப்பால் சென்றோமென்ற நினைப்பையுமறுத்து.
அறுத்தோ மென்ற அறிவையு மாற்றி.
மாற்றினோ மென்ற மனதையும் மாய்த்து.
மாய்த்தோ மென்னும் மதியையு மீர்ந்து.

ஈர்த்தோ மென்ற இன்பத்தையுந் தொலைத்து நின்ற அவ்விடத்தினின்று ஜீவேஸ்வர பாவனைநீக்கி அவ்வுள்ளே அகண்ட நாம ரூப ரகித சர்வ விலக்ஷண மாயா ரகித மனோவ கோசர மாற்றமில்லாத பிரஹ்ம தரிசனமுண்டாகும். அவ் வான்ம வடிவமாகிய தன்னைத்தானே தனித்து ஜீவப் பிரஹ்ம ஐக்கிய வடிவ பிரம்மானுபூதிச் செல்வராய் அவ்வுள்ளே இரண்டறக்கலந்து அத் வைதமாய் ஆனந்தாதீதமாய் இருக்கக் கடவீர்களாக.

இவ்வண்ணமாக அக்ஷர நுட்ப மென்னு மிவ் வனுபவ நூலின் பாகியார்த்த ஆந்தரார்த்த சூக்ஷ்ம அனுபவ தாத்பர்யங்களைச் சுருக்கமாகப் பொழிப்புரை வாயிலாகக் கூறியது. இதோடு முற்றுப் பெற்றது.

ஓம். தத். ஸத்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183884
சென்னை

ஓம்.

ஞானி உயர்ந்த ஜாதி. தத். ஸத். அஞ்ஞானி தாழ்ந்த ஜாதி

க. கடவுளைக் கண்டு முடிந்தவன் பிராமணன்.

உ. கடவுளைக் காணத் தீவிர அப்பியாஸம் செய்பவன் க்ஷத்திரியன்.

௩. கடவுளைக் காண வேண்டிய சாதனங்களைச் சேர்ப்பவன் வைசியன்.

௪. கடவுளைக் காணும் ஆரம்பப்படியி லேறியவன் சூத்திரன்.

ரு. கடவுளைக் காண்பதின் யாதொரு முயற்சியுமின்றியிருப்பவன் பஞ்சமன்.

## பிரஹ்ம சாக்ஷாத்காரம் ஜனனமரண நிவர்த்தி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பரிசுத்தம் | எங்கே | உதயமோ | அங்கே | பக்தி | உதயம். |
| பக்தி | எங்கே | உதயமோ | அங்கே | அன்பு | உதயம். |
| அன்பு | எங்கே | உதயமோ | அங்கே | சாந்தம் | உதயம். |
| சாந்தம் | எங்கே | உதயமோ | அங்கே | சக்தி | உதயம். |
| சக்தி | எங்கே | உதயமோ | அங்கே | ஞானம் | உதயம். |
| ஞானம் | எங்கே | உதயமோ | அங்கே | கிருபை | உதயம். |
| கிருபை | எங்கே | உதயமோ | அங்கே | கடவுள் | உதயம். |
| கடவுள் | உதயம் | பெற்றவர் | கடவுளே | ஆகிறார். | |

விலக்ஷணானந்தர்.